

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாதல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன், தென்மொழி த. தேனியல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.) தொலைப்பேசி 847829

சுவடி: 22] உகள மீனம் (மார்ச்சு-ஏப்- 1986 [ஓலை- 5

மொழி, இன, நாட்டுக்குழைக்கும்

பொதுநலத் தொண்டர்களுக்கு! -5



மொத்தத்தில், தொண்டு என்னும் சொல் உடலுழைப்பையே குறிப்பதாதலால் உடலுழைப்புத் தராதவர் தொண்டர் என்னும் பெருமைப் பெற வியலாது; பெரும்பாலும் வெறும் அறிவு நிலையில் ஈடுபடுபவர்கள் தொண்டர்கள் என்னும் பெருமை நிலைக்கு உரியவர்கள் ஆக இயலாது. இது தொடர்பாகச் சில விளக்கங்கள் நமக்கு ம் தேவை ஏனென்றால், அறிவுத் துறையில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர்கள், கதையாசிரியர்கள், பாடலாசிரியர்கள் இதழாசிரியர்கள், நாடகாசிரியர்கள்

போலும். அனைவருமே தாங்கள் பொதுமக்களுக்குத் தொண்டு செய்வதாய் எண்ணிச் சொள்வதும், எழுதுவதும், பெருமை பேசிக் கொள்வதுமாக உள்ளதை நம்நாட்டில் பரவலாகக் காண முடிகிறது. இவையெல்லாம் தொண்டுக்கான அடிப்படைக் கூறுகளே ஆயினும், இவற்றில் ஈடுபடுபவர்களெல்லாரும் தொண்டர்கள் என்னும் பெருமையைப் பெறுபவர்கள் ஆகார்.

நாம் செய்யும் உடற்பயிற்சி எனபது வேறு; போர்ப் பயிற்சி வேறு. உடற்பயிற்சி செய்பவர்கள் எல்லாரும் போர்ப் பயிற்சி பெற்ற படை வீரர்களாக எங்ஙன் மதிக்கப் பெறுவதில்லையோ அங்ஙனே எழுத்துத் துறையில் மட்டும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் தொண்டர்கள் ஆக முடியாது. அவர்களெல் லாரும் ஒரு தொழிலைச் செய்யும் தொழிலாளர்களே? தொழில் தொண்டு ஆகாது. எழுததும் ஒருவகைப் பிழைப்புத் தொழிலே வாழ்க்கைத் தொழிலே! (Profession)! வரையறுக்கப் பெற்ற ஊதியமுடைய எந்தத் தொழிலும் தொண்டு என்னும் பெருமை யைப் பெறமுடியாது. ஊதியம் கருதாத பொதுநலச் செயலே தொண்டாகும். ஒருமுறை ஓர் இதழாசிரியர், தாம் ஐந்தாண்டு-கள் இதழாசிரியராக இருந்து பணியாற்றிய நிலையை இத்தனை ஆண்டுகள் தாம் தொண்டு செய்ததாகக் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டார். இதழாசிரியப் பணி ஒரு வருவாய்க்குரிய பணியே ஆகும். அது பொதுமக்களை நோக்கிச் செய்யப் பெற்றாலும் கூட, அது தொண்டு என்னும் முழுப் பெருமைக்கு உகந்ததாகாது. வருவாயை எதிர்பாராமல் அல்லது ஊதியம் கருதாமல் அப் பணி செய்யப் பெறுவதாயின், அதையும் ஒருவாறு தொண்டு என்று மதிக்கலாமே தவிர, அதுவே முழுத் தொண்டுக்குரிய பெருமையைப் பெற்றுவிட முடியாது. தலைமைப் பொறுப்பும் அந்த இலக்கணத்துடன்தான் மதிப்பிடப் பெறுதல் வேண்டும்.

படைத்துறைப் பயிற்சி பெற்ற படைவீரர்களுக்குத் தலைமை தாங்கி, அவர்களை வழிநடத்திச் செல்லும் ஆற்றல் பெற்ற ஒரு வரே, எங்ஙனம் படைத்தலைவராகவோ, படைத்தளபதியாகவோ மதிக்கப் பெறுவாரோ, அப்படியே ஊதியம் கருதாத பொது நலப் பணி செய்யும் தொண்டர்களைப் போலவே, தாமும் ஊதி யங்கருதாத பொதுநலப் பணி செய்பவராகவும், அதேபொழுது அவர்களை அறிவாலும் செயலாலும் திட்டமிட்டு வழிநடத்திச் செல்லும் தகுதி பெற்றவராகவும் உள்ள ஒருவரே தலைமைப் பொறுப்புக்கும் ஏற்றவராக மதிக்கப்பெறுவார். படைத்துறைப் பயிற்சி பெறாத பல படைமுகங்களைக் காணாத ஒருவர்போல, எந்த வகையான பொருளிழப்பும், செயலிழப்பும் செய்யாத ஒருவர் பொதுநலச் செயல் காரணமாக எந்த வகையான ஒரு தொல்லையோ இடரோ படாமல், எவ்வகை ஈகமோ செய்யாமல, ஒருவர் தலைவராக ஆகிவிட முடியாது!

மேற்கூறப்பெற்ற இவ் விலக்கணங்களை வைத்துப் பார்க் கையில், நம் நாட்டில், தொண்டர்கள் என்று உலா வருபவர்

களுள், தலைவர்கள் என்று பெருமைப் பட்டுக் கொள்பவர்களுள், எத்தனைப் பேர் உண்மைத் தொண்டர்களாகவும், தலைவர்களாகவும் மதிக்கப் பொருத் தக்கவர்கள் என்பதை அவரவர்களே எண்ணிப்பார்த்து மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

பொதுத் தொண்டு செய்வது எளிது என்றும், அஃதால் வரும் புறப் பெருமைகள் உறுதியும் வேறு எதற்குமே தகுதியில்லாதவர்களெல்லாம் இதற்குப் பெருந் தகுதி படைத்தவராகத் தம்மைக் கருதிக் கொண்டும் ஏதாவதொரு வகையில் கட்சியில், தம்மை இணைத்துக்கொண்டும் பொதுத் தொண்டு செய்ய முன்வந்து விடுபவர்களையே நம் நாட்டில் பெரிதும் பார்க்கிறோம் அவ்வாறு முன் வந்துவிட்டவர்களின் ஆர வா ர த் தன்மைகளையும்' விளம்பர வேட்கையினையும் பொருள் நசையினையும், போதிய த குதிப்பாடின்றி எங்கும்-எதிலும் கால் வைத்தும், வாய் வைத்தும் நுழைந்தும் பேசியும் விடுகின்ற மூடத் துணிச்சலையும், முரட்டுப் போக்கினையும், மண்மாண் புனைபாவை போலும் வெற்றுத் தருக்கினையும் அறிஞரையும்-அதிகாரத்தையும்-சட்டத்தையும் மதியாத செருக்கினையும் பார்க்கும்போது, பொதுத் தொண்டர் என்றாலே வெறுத்து முகஞ் சுளிக்கின்ற ஒரு நிலை — மனங் குமட்டுகின்ற ஓர் அருவெருப்புத் தன்மை நம் நாட்டில் ஏற்பட்டுள்ளதை நாம் இவ்விடத்து மனந்திறந்து சொல்லியே ஆசல் வேண்டும் இந்நிலை அடியோடு மாறி, மக்கள் பொதுத் தொண்டர் என்றாலே மதித்துப் போற்றி வணங்குகின்ற மனநிலை உண்மையான பொதுத்தொண்டர்களால் உண்டாக்கப் பெறுதல் வேண்டும்.

அரசியலில் ஈடுபடுவர்களெல்லாரும் தங்களைப் பொதுத் தொண்டர்கள் என்று கூறிக்கொண்டு, மக்களை ஏய்த்துப் பிழைக்கின்ற மனப்பாங்குகள் மொழி, இன, நாட்டுக் குழைக்க விரும்பும் நம் அன்பர்களிடம் அறவே ஒழிதல் வேண்டும். நம் பாலும், நம் தொண்டின் பாலும் ஈர்க்கப்பெற்ற மெய்த்தொண்டர் சிலர். காலம் செல்லச் செல்லத் தொடக்கத்தில் தங்களுக்கு வந்துற்ற உண்மையான பாராட்டுகளையும், பொருளுதவிகளையும் மேன்மேலும் அவாவி, அங்காப்புக் கொண்டு, ஆங்காங்குத் தங்கள் நடை முறைகளில் போலித் தன்மையையும், நந்நிலப்பாடுகளையும் மிகுத்துக்கொண்டு மதிப்பிழந்து தாந்து போனதை நாம் கண்டும் கேட்டும் மனம் மிகவும் நோகவேண்டியிருந்தது.

உண்மையான பொதுத் தொண்டர்களின் தகுதிப்பாடுகளையும், உழைப்புத் திறன்களையும், நம் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தொடங்கிய நிலையில், 'தென்மொழி', சுவடி-18, ஓலை-4 5 இல் வரையறுத்துக் கூறிய உரைகளை, மொழி, இன, நாட்டுக் குழைக்க விரும்பும் மெய்த் தொண்டர்கள் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டுமென்று மீண்டும் இவ்விடத்தில் வலியுறுத்த விரும்புகிறோம்.

''பொதுவாகவே, நம் நாட்டில், மக்களுக்கு உண்மையான தொண்டு செய்ய வேண்டும் என்னும் அடிப்படையில் அறிஞர்களும், தலைவர்களும் இன்னும் முழுமையாகத் தங்களை ஒப்படைத்துக் கொள்ளவில்லை... இங்குள்ள நம் இளைஞர்கள் வினைக்குப் பெரிதும் அஞ்சுகின்றனர்; தயங்குகின்றனர். நேரம் காலம் பாராது உழைக்க முன் வருவதென்பது அவர்களுக்குப் பெரிதும் முடியாத செயலாகவே இருக்கிறது; சட்டையில் அழுக்குப் படாமல் உழைக்கவேண்டும் என்பதே அவர்களுக்கு உவப்பான செயலாக இருக்கிறது; மாறானதைக் கசப்பான செயலாகவே அவர்கள் கருதுகின்றனர்.

''பொதுத் தொண்டுக்கு வருகிறவர்கள் கழுதைபோல் சுமக்கவும், மாடு போல் உழைக்கவும், எருமை போல் எதையும் பொருட்படுத்தாமல் இருக்கவும், நாய் போல் அலையவும், பன்றி போல் கிடைத்ததைத் தின்னவும், ஒட்டகம்போல் பட்டினி கிடக்கவும், புலிபோல் சீறிப் பாயவும், பூனைபோல் பதுங்கி இருக்கவும், அரிமாபோல் கொள்கை முழக்கம் செய்யவும், எறும்புபோல் சுறுசுறுப்பாய் இயங்கவும் கழுகைப்போல் கூர்மையாக நோக்கவும், ஆந்தைபோல் இரவில் கண் விழிக்கவும், துறவிபோல் ஓர் இடத்தில அமைந்திருக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.''

'இவற்றுக்கு நேர்மாறாகப் பொதுத் தொண்டை ஒரு வருவாயுள்ள அலுவலாகவே இற்றை இளைஞர்கள் கருதியிருக்கிறார்கள் சிலர் மேடையேறிப் பேசுவதும், அல்லது பாட்டெழுதிப் பாடுவதும், அல்லது கூட்டங்களைச் சேர்த்துக்கொண்டு போராட்டம் நடத்துவதுமே பொதுத்தொண்டு என்று கருதுகிறார்கள். பொதுத் தொண்டுக்கே இலக்கணம் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதுதான்.''

எனவே, நம் இனிய தமிழ்மொழி முன்னேற வேண்டுமானாலும் சரி, நம் இனம் முன்னேற வேண்டுமானாலும் சரி, நம் நாடு முன்னேற வேண்டுமானாலும் சரி, முதலில் நாம் அம் முன்னேற்றத்திற்கான உழைப்பில் முயற்சியில் ஈடுபட்டு உழைக்கத் தகுதியுள்ளவர்களா அவ்வுழைப்புக் கிடையில் வரும் இடுக்கண்களையும், இடர்ப்பாடுகளையும் தாங்கிக் கொண்டு மேற்செல்லும் உறுதியுடையவர்களா, என்பதை ஒன்றுக்குப் பத்துமுறை நூறு முறை உறுதி செய்துகொள்ள வேண்டும் — (தொடரும்)

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல், எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கொள்கிறோம். அமைச்சர்.

பெருஞ்சித்திரனார் விடையளிக்கிறார்!

(பொதுவான சில சிக்கலான கேள்விகள் என்னிடம் மடல்கள் வழியாகவும், சில பொது நிகழ்ச்சிகளின் பொழுதும், சில கலந்துரையாடல்களிலும் கேட்கப் பெறுகின்றன. அவை சிலவற்றிற்கு இங்கு, தெள்வான விடைகளும், விளக்கங்களும் கூறப் பெறுகின்றன — எல்லார்க்கும் அவை தெரியவேண்டும் என்னும் நோக்கத்துடன்.

கூட்டங்கள், கலந்துரையாடல்கள் முதலியவற்றில் அத்தகைய கேள்விகள், ஐயப்பாடுகள் கேட்கப் பெற்றவையானால், அவை, பெயர், ஊரின்றியும், மடல்கள் வழியாகக் கேட்கப் பெற்றவையானால், அவை கேட்டவர்களின் பெயர்கள், ஊர்களுடனும் இங்கு வெளியிடப்பெற்று, விடை கூறப்பெறுகின்றன.)

கேள்வி: 1. (பெயர் வெளியிட விரும்பாதவர்) புதுக்கோட்டை அண்மையில் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் தங்களைப் பற்றிப் பலரிடம் நேரிடையாகவும், மடல்கள் வழியாகவும், அவர் நடத்தும் இதழிலும் பலவாறான அவதூறுகளையும், பழியுணர்வுகளையும், குற்றங்களையும் மிகவும் இழிவான முறையில் சொல்லியும், எழுதியும், பரப்பியும் வருகிறாரே! அவரைப் பற்றியும், அவர் கூறுவன பற்றியும் நீங்கள் எதுவுமே மறுத்து எழுதுவதில்லையே, ஏன்?

விடை: நல்லனபற்றிச் சிந்தியாமல் தீயனபற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் இவர் போலியர் சிலர் என்றும் எங்கும் எப்பொழுதுமே இருப்பர். இஃது அவர்கள் தேடிக் கொள்ளும் ஒருவகை மலிவான விளம்பரம். தமிழ்ப் போர்வையில் மறைந்திருக்கும் இக் கரவான பேர்வழியைக் கள்ளம் கவடற்ற முறையில் ஐரோப்பாவிற்கு அழைத்துச் சென்ற பிழையை இப்பொழுது உணர்கிறேன்.

> நன்றாற்றலுள்ளும் தவறுண்டு, அவரவர்
> பண்பறிந்து ஆற்றாக் கடை.
>
> மக்களே போல்வர் கயவர் அவரன்ன
> ஒப்பாரி யாங்கண்ட தில்.
>
> அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
> மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

என்னும் மூன்று குறள்களுக்கும் முழுப்பொருளாய் விளங்கும் இவருடைய உள்ளம் ஒரு பொறாமைப் படுகுழி, கயமைக் குப்பை என்று அறிந்தபின், என் செய்வது? மலத்தை வாயிலிட்டுக் கொண்டு பேசபவரிடம் நாம் என்ன பேசுவது? இவர்பற்றிய செயற்பாடுகள் செய்தி

கள் அனைத்தும் என் 'ஐரோப்பியச் செலவுக் கட்டுரை' யில் வரும். பொறுமையாக இருந்து அத்தொடரைப் படியுங்கள். மேலும், இவர்மேல் இவரின் இழி செயலுக்காக நான் கொடுத்துள்ள முறையீடு ஒன்று வழக்குமன்றத்தில் உள்ளதால் இவர் பற்றி அதிகமாக இக்கால் கூறுவதற்கில்லை. அத்துடன், நாய் குரைத்தால் நாமும் திருப்பிக் குரைக்கவேண்டுமா, என்ன? இனி, இன்னொரு செய்தி. அண்மையில் வெளி வந்த 'தமிழ் நிலம்' இதழ் எண்: 71-இன் முதல் பக்கத்தைப் பாருங்கள். இவர் யாரென்பது தெளிவாக விளங்கிவிடும். பின்னர், இத்தகைய ஒருவர் என்னதான் செய்யமாட்டார் என்பதை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.

கேள்வி: 2. (கலந்துரையாடலில் (கேட்கப்பெற்றது). திருக்குறளைப்பற்றித் தங்களின் தெளிவான முடிவான கருத்து என்ன? அந்நூலை வைத்து இயக்கம் நடத்தப்பெறுவது பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

விடை: திருக்குறள் ஒரு வாழ்க்கை விளக்க நூல்; தமிழரின் வரலாறு சரிவடையத் தொடங்குகையில், அதனை எவ்வாறு கட்டிக் காத்துக் கொள்ள வேண்டும் என்று எச்சரித்து அறிவுறுத்தும் வகையில், அதுபற்றிக் கவலை கொண்ட பெரும் பேரறிஞர் ஒருவரால் எழுதப்பெற்றது. அதில் வாழ்க்கை அமைப்பின் பல்வேறு கூறுகள் விளக்கப்பெறுகின்றன. அதற்குச் சரியான ஓர் எடுத்துக்காட்டைக் கூற வேண்டுமானால், அஃது ஒரு மருந்துச் சாலை போன்றது. ஒவ்வொருவரும் தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட வாழ்க்கைக் கூறுக்குப் பொருந்தும்படி, அதில் கூறப்பெறும் வழிகாட்டுதல்களைக் கடைப் பிடிக்கலாம். தங்கள் நோய்களுக்குத் தேவையான மருந்துகளை உண்ணலாம். இதில், அனைவரும் அனைத்து வழிகாட்டுதல்களையும் கட்டாயம் பின்பற்றவேண்டும் என்பதாகவோ, அனைவரும் அனைத்து மருந்துகளையும் கட்டாயம் உண்ணத்தான் வேண்டும் என்பதாகவோ எவரும் பொருத்தமில்லாமல் பொருள் பண்ணிக்கொள்ளக் கூடாது. அஃதால் குழப்பங்களும், தவறுகளுமே நேரும். இனி இதை ஓர் இயக்கமாகச் செய்வதில் எவ்வகை பொருத்தமும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

குன்றவாணன், சென்னை-1. கேள்வி: 3. அண்மையில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், தஞ்சைப் பல்கலைக் கழகம், சொல்லாய்வறிஞர் திரு. அருளி அவர்களைக்கொண்டு வெளியிட இருக்கும் 'தூய தமிழ் அகராதி'யைப் பகடி செய்து, 'தூய தமிழாவது, அழுக்குத் தமிழாவது' என்று கூறியிருக்கிறாரே! அது பற்றி உங்கள் கருத்து என்ன?

விடை: ஆமாம், அவர் அறிக்கையை நானும் பார்க்க நேர்ந்தது. அது பொறாமையின் புலம்பல்! தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தம்மைப் பெரிதாக மதிக்கவில்லை என்னும் எரிச்சலில், பொருத்தமில்லாமல் ஏதேதோ உளறியிருக்கிறார் அவர். அவர்க்கு மிகுதியும் அகவையாகி விட்டதன்றோ! அதனால் வந்த தன்னம்பிக்கையற்ற உணர்வின் தெளிவில்லாமல் பிதற்றியிருக்கலாம். தமிழர் இன்று பேசி, வழக்கில் இருந்து வரும் கலப்புத் தமிழே அழுக்குத் தமிழ். அக் கலப்புச் சொற்களை நீக்கிய மூல முதல் தமிழே தூய தமிழ். இவ் வேறுபாடுகளை விளங்கிக் கொள்ள மனமின்றி இடக்கராக ஓர் அரிய பணியை அவமதித்து அறிக்கை விடுப்பது, அவர் பெருந்தன்மைக்கு இழுக்காகும்; வேறு எங்கும் போவானேன்! அவர் பெயரிலும், பேச்சிலும் இருப்பதுதான் அழுக்குத் தமிழ் என்று அவர் கூறுகின்ற கலப்புத் தமிழ். அதை மூடி மறைப்பதற்குத்தான், அவர் இவ்வாறு பேசி வருகிறார் என்பதைத் தூய தமிழ் உணர்விஞர் நன்கு விளங்கிக் கொள்ளலாம். விசுவநாதம் என்னும் அவரின் அழுக்குத் தமிழ்ப் பெயருக்கான தூய தமிழ்ப் பெயர்ப்பு உலகப்பேரொலி என்பதாகும். இதனை அவர் முதலில் உணர்ந்து தம் பெயரைத் தூய்மைப் படுத்திக் கொள்ளவேண்டும். 0

மிகவும் வருந்துகிறோம்!

நெடுநாளைய 'தென்மொழி'த் தொண்டரும், முன்னாள் தென்மொழி அலுவலக எழுத்தரும், 'தமிழ்ச்சிட்டி'ல் அவ்வப்பொழுது கட்டுரைகள், கதைகள், பாடல்கள் எழுதிவந்த தூய தமிழ் எழுத்தாளரும், நம் மேல் இறுதிவரை மாறாத அன்பும், மதிப்பும், பாசமும் வைத்திருந்த உண்மைத் தொண்டரும், கொள்கை மறவரும், இறுதி நாளில் மதுரையில் தமிழ் முரசு, முரசொலி, மதுரை மணி போலும் நாளிதழ்களில் பணியாற்றிய வினையாளரும் ஆகிய அன்பர் தி. குமரப்பன், க.இ. அவர்கள், கடந்த 15 2-1986 அன்று மதுரையில் உடல் நலமின்றி உயிர் தவிர்த்தார் எனும் செய்தி கேட்டுத் தென்மொழிக்குடும்பமே மிகவும் துடிப்புற்றுத் துன்பமெய்தியது. அவரின் அளப்பரிய தென்மொழித் தொண்டு, தென்மொழி வரலாற்றில் என்றென்றும் சிறந்து விளங்கும் தகையது.

அவரைப் பிரிந்து வாடும் அவர் குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும், தென்மொழிக் குடும்பமும் யாமும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— பெருஞ்சித்திரனார்.

வழிபடு தமிழ்!

(கடந்த 10—2—1986 அன்று மாலை 7.03 மணிக்குச் 'சென்னைத் தொலைக்காட்சி ஒளிபரப்பிய 'தமிழ்ச்சோலை' நிகழ்ச்சியில் பாவலரேறு அவர்கள் ஆற்றிய எழுத்துரை.)

வழிபடு தமிழ்' என்னுந் தலைப்பு 'வழிபடுவதற்கு உரிய மொழி தமிழ்' என்றும் 'வழிபாடு செய்வதற்குரிய மொழி தமிழ்' என்றும் இருவகையில் பொருள்படக் கூடியது.

இவ்விரண்டு பொருள்களின் அடிப்படை எவ்வாறாயினும், அஃதாவது தமிழ் மொழியையே வழிபடுவதானாலும், அல்லது தமிழ் மொழியில் வழிபடுவதாயினும் அவ் விரண்டு நிலைகளுக்கும் தமிழ், வேறு எம்மொழியையும் விட மிகவும் தகுதியானமொழி யென்றே கருதுதல் வேண்டும்.

உலகில் உள்ள பல்லாயிரக் கணக்கான மொழிகளுக்குள்ளும் மொழியைத் தாய்க்கு இணையாக வைத்துத் 'தமிழ்த்தாய்' என்று கூறுகின்ற மரபும், இன்னும் ஒருபடி மேலே சென்று, அதைத் தெய்வத்திற்கு இணையாக வைத்துத் 'தமிழ்த் தெய்வம்' அல்லது 'தெய்வத் தமிழ்' என்று கூறுகின்ற மரபும், தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழினத்தவர்களிடந்தாம் உள்ளன. பலர் தங்களின் மொழியைத் 'தாய்மொழி' (Mother Tongue) என்று கூடக் கூறுவதில்லை. ஒரு சில இனத்தவரோ அவர்களின் மொழியைத் 'தந்தை மொழி' (Father Tongue) என்றே கூறு கின்றனர். அதுபோலவே தாங்கள் வாழும் நாட்டையும், 'தாய்நாடு' Mother land) என்று கூறாமல் 'தந்தை நாடு' (Father land) என்றுதான் கூறுகின்றனர். தமிழர்களே! தாங் கள் வாழு நாட்டையும் 'தாய்நாடு' என்று அழைக்கும் மர பினர் என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு தங்கள் மொழியைத் 'தாய் மொழி' என்றும் தாங்கள் வாழும் நாட்டைத் 'தாய் நாடு' என்றும் அழைப்பது அவர்கள் தாய் வழி மரபைச் சேர்ந்தவர்கள் என்பதைக்காட்டும். தாய் வழி மரபினரே இவ்வுலகில் தொன்மை அஃதாவது பழமை இனத்தவர் என்பது மாந்தவியல் ஆராய்ச்சியாளர் (Anthropologist கருத்து 'தாய்' என்னும் சொல்லின் அடிப் படையில் பிறந்த தாயம், தாயாதி என்னும் சொற்கள் இவ்வுண் மையை மெய்ப்பிக்கும். இச் சொற்களுக்கு உரிமை, உரிமை யுடையவர் என்னும் பொருள்களே முதற் பொருள்களாகும். இது நிற்க.

இனி, பொதுவாகவே நம்மிடையே இரு வகைக் கருத்துகள் எப்பொழுதுமே உண்டு. இறைவன் உண்டு என்பதும், இல்லை என்பதும் அவை இறைவன் இருந்தாலும் வழிபாடு தேவையா, இல்லையா என்பதும் அக் கருத்துகளை யொட்டி எழும்பும் இன்

ஒரு கேள்வியாகவும் உள்ளது. இவற்றைப் பற்றியெல்லாம் இங்கு நாம் ஆராய்ச்சி செய்யப் போவதில்லை.

கடவுள் உண்டு என்பதும், இல்லை என்பதும், அவரவர் அறிவு வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும், நம்பிக்கையையும் பொறுத்த செய்தியாகும். இவ்விரு வகைக் கருத்துகளும், பிறருடைய உரிமையிலும், இயக்கத்திலும், வாழ்க்கையிலும் தலையிட்டு, அவர்களை ஆட்சி செய்து, அடிமைப்படுத்தி, ஏமாற்றவும், பூசல்களையும் சண்டை-சச்சரவுகளையும் உண்டாக்காத வரையில் தவறில்லை என்பதே மாந்தவியல் (Sociology) அடிப்படையில் நாம் மேற்கொள்ள வேண்டிய கருத்தாகும்.

மக்கள் மனவியல் (Social Psychology) அடிப்படையிலும், ஏன் அறிவியல் அடிப்படையிலும் கூட இவ்விரண்டு எதிர்க் கருத்துகளுக்கும் என்றுமே முடிவில்லை (Infinite) என்பதையும், உலகம் உள்ள வரையிலும், அதில் மக்களுயிர் உள்ள வரையிலும், இவ்விரு வகைக் கருத்துகளும் இருக்கவே இருக்கும் என்பதையும் உறுதியாகக் கூறலாம்.

பொதுவாகவே, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், ஏன், இந்தியாவைப் பொறுத்த அளவிலே என்றுகூடச் சொல்லலாம்— கோயில் வழிபாட்டுக்கென்று சமசுகிருத மொழி ஒன்றே தகுதியானது, பிறமொழிகள் தகுதியில்லை என்னும் கருத்து, இக்காலத்திலும் கூட கூறப்பெற்று வருகிறது. தமிழ் மொழிக்குக் கூட அந்தத் தகுதி முழுமையாகக் கொடுக்கப் பெறவில்லை. இது, கடவுள் நம்பிக்கை கொண்டவர்களுக்குச் சரியானதாகவும் பொதுமையான நடுநிலையான கருத்தாகவும் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இறைவனுக்கு அல்லது கடவுளுக்கு எல்லா வகை ஆற்றலும் இருப்பதாகவும் உலக உயிர்கள் யாவற்றுக்கும் பொதுவாக இயங்கின்ற நிலை இருப்பதாகவும், நாம் சொல்லிக் கொண்டு இருப்பது உண்மையானால், அவ்வம் மொழிக்காரர்கள் அவரவர் மொழிகளில்தாம் கடவுள் வழிபாடு செய்வது பொருத்தமாகவும் சரியானதாகவும், உண்மையானதாகவும், உணர்வு நிறைவானதாகவும் இருக்க முடியும்.

அவ்வம் மொழியினங்களில் பிறக்கும் குழந்தைகள், அவரவர்கள் மொழிகளில்தாமே தங்கள் தங்கள் தாயிடத்திலும் தந்தையிடத்திலும், தங்கள் தங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்ளவும், ஆதரவைக் கோரவும் முடியும்! இவ்வகையில் உலகில் உள்ள எந்த இனத்தவரும் அவரவர் மொழியில் வழிபாடு நிகழ்த்துவதைத் தடுப்பதோ மறுப்பதோ-இழிப்பதோ அல்லது பழிப்பதோ மாந்தத் தன்மைக்குப் பொருத்தமாக இருக்கமுடியாது.

இன்றும் உலகில் உள்ள பல்வேறு மொழிக்காரர்கள் தங்கள் தங்கள் தாய்மொழிகள் வழியாகவே கடவுள் வழிபாடு செய்வதை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆங்கிலேயர்கள், ஆங்கில மொழியிலேயே கடவுள் வழிபாடு செய்கிறார்கள்.

அரபியர்கள், அரபு மொழியிலேயே இறை வழிபாடு செய்கிறார்கள்.

சீனர்கள் சீன மொழியிலும், சப்பானியர்கள்சப்பான் மொழியிலுமே புத்தரை வழிபடுகிறார்கள்.

பர்மாவிலும் பர்மியர்கள் பர்மிய மொழியில்தான் புத்தரை வழிபாடு செய்கிறார்கள்.

பிரெஞ்சும், ஆங்கிலமும் பேசும் மொரீசியசு தீவில் உள்ள தமிழர்கள்கூட, வேறு மொழிக் குறுக்கீடு இல்லாமையால் தமிழ் மொழியில்தான் வழிபாடு செய்கிறார்கள்.

ஆப்பிரிக்காவில் 20-க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பெறுகின்றன. ஆனால், அவரவரும் அவரவர் மொழியில்தான் வழிபாடு செய்கிறார்கள்,

போப் கூட நான்கு மொழிகளில் வழிபாடு செய்கிறார்.

எனவே, இறைவனுக்குக் குறிப்பிட்ட ஒரு மொழியில்தான் கோயில் வழிபாடு செய்யவேண்டும் என்பது, அறிவியல் வளர்ச்சியும், மாந்த உரிமை வளர்ச்சியும் மிகுந்துள்ள இக் காலத்திற்கு ஏற்ற கருத்தாக இருக்கமுடியாது. இறை நம்பிக்கை கொண்டவர்கள், அவரவர் மொழியில் கடவுளை வழிபடுவது தவறுமன்று; குற்றமுமன்று. இன்னும் சொன்னால் எல்லாருக்கும் அதுவே சரியானதாகவும், பொருத்தமானதாகவும், *ஞாயமானதாகவும் இருக்கமுடியும்.

இனி, இயலும், இசையும்-நாடகமும் சேர்ந்து நன்கு வளர்ச்சி பெற்றதும், மெய்யறிவுணர்வு பழுத்ததும் ஆகிய நம் இனிய செந்தமிழ் மொழியோ, கடவுளும் இருந்து புலமை பயந்த ஒண்டீந்தமிழ் என்னும் பெருமை பெற்றது.

'கண்ணுதற் பெருங் கடவுளும் சழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்தஇப் பசுந்தமிழ்'

—என்று கூறிப் பெருமை சாற்றுவார் திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர். இச் செய்தி உண்மையோ அல்லது கற்பனையோ, அவர் அவ்வாறு கூறியது ஏனென்றால், அப்படிப்பட்ட தமிழின் பெருமையை உணராமல், பிறஎளிய மொழிகளுக்கு இணையாக அதை வைத்துப் பேசுகிறார்களே என்று மனம் வருந்தித்தான் கூறுகிறார். அவர் கூறுவதைப் பாருங்கள்;

பண்ணுறத் தெரிந்தாய்ந்தஇப் பசுந்தமிழ், ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ!

—என்பது அவர் வருத்தம்.

* ஞாயம்- (தமிழ்) = நயன்-நயம்-நாயம் ஞாயம்
நியாயம் என்பது வடமொழித் திரிபு.

இங்கு நம் பேச எடுத்துக்கொண்ட தலைப்பு, இரண்டு வகையான பொருள்களை-உண்மைகளை விளக்குகின்றது என்று தொடக்கத்தில் கண்டோம்.

தமிழ் வழிபடுகின்ற மொழியாகவும், வழிபாடு செய்வதற்குரிய மொழியாகவும் உள்ளதென்றும், இத்தகைய இருவகைச் சிறப்புகளையும் தமிழ் தவிர வேறு எந்த மொழியும் பெற்றிருக்கவில்லை என்றும் கண்டோம். இதைப் பெருமை கொள்ளுகின்ற மனவுணர்வுடன் கூறவில்லை உண்மையைக் கூறுகின்ற நிலையில் தான் இதைக் குறிப்பிடுகின்றோம்.

ஒரு மொழியை வாழ்த்திப் பேசுகின்ற மரபு, தமிழ்மொழிக்கே உரிய மரபாக உள்ளது.

இன்றும் நம் அரசு,

'நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்'

என்று தொடங்கி,

'எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே-உன்
சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே?'

என்று முடியும், மனோன்மணியம் ஆசிரியர் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாக வைத்திருப்பது நாம் அறிந்ததே! அந்த அளவில் தமிழ் என்பது தாயாகவும் தெய்வமாகவும் மதிக்கப்பெற்று, ஒரு வழிபடு மொழியாக விளங்குகிறது.

தமிழ் என்பது ஒரு மொழிதான் என்றாலும், அதற்கு உயிரோ, உடம்போ, வேறு உருவமோ இல்லைதான் என்றாலும், உணர்வு நிலையில் அதை நாம் தெய்வ நிலைக்கு உயர்த்தி வாழ்த்தி வணங்குகிறோம் என்றால், அது நம் பற்று என்று மட்டும் சொல்லி விட முடியாது.

ஒரு வகையாகப் பார்த்தால், உலகில், நாம் தொடர்பு கொள்ளுகின்ற அனைத்துப் பொருள்களும், உணர்வுகளும் ஏதோ ஒருவாறான பற்றின் அடிப்படையில்தாம் கருதப் பெறுகின்றன.

தாய்மீது உள்ள அன்பு மக்களின் மேல் உள்ள அக்கறை, நாட்டு வளர்ச்சியில் நமக்குள்ள ஆர்வம் அனைத்துமே பற்றுதான், அதுபோலவே, நாம் நம் தாய்மொழியின் மேல் கொண்டிருப்பதும் ஒருவகைப் பற்றுதான் என்றாலும், அந்தப் பற்று, நம்மை இணைத்துக் கொள்ளவும் நெறிப்படுத்திக் கொள்ளவும், நிலைப் படுத்திக் கொள்ளவும் உதவுகிறது இன்னும், சரியான வாழ்வுணர்வையும், அறவுணர்வையும் தூய்மையான மாந்தப் பொறுமையுணர்வையும் நமக்குக் கற்பிக்கிறது. எனவேதான், நம் உயிர் இயக்கத்திற்கே அடிப்படையாக உள்ள தமிழ்மொழியைத் தெய்வத்தின் அளவுக்கு உயர்த்திப் பேசுவதுடன் நில்லாது, அதனை வாழ்த்தவும், வழிபடவும் செய்கிறோம்.

வழிபடுதல் என்றால், ஒரு வழியில் நிற்றல், ஒரு கொள்கையைப் பின்பற்றுதல், வாழ்த்துதல், வணங்குதல் என்றெல்லாம் பொருள்படும்.

அரசியல் ஆளுமை உடைய இக்காலத்தில், ஒரு கட்சியின் தலைவர் வழியில் நிற்பதை-அவர் வழிப்படுதல் என்று சொல்லலாம். ஒன்று அல்லது ஒருவர் வழிப்பட்டு நிற்பது வழிபாடு. அதுபோல் ஒரு சமயம் அல்லது ஒரு கடவுள் வழிப்பட்டு நிற்பது, அதைப் போற்றுவது அல்லது வாழ்த்துவது அல்லது வணங்குவது வழிபாடு எனப்பெறும்.

ஒரு சமயக் கடவுளைப் போற்றுவது வாழ்த்துவது அல்லது வணங்குவது வழிபாடு என்றால், ஓர் இயக்கத்தின் தலைவரைப் பின்பற்றுவதும் போற்றுவதும் வழிபாடுதான்? மாந்த வணக்கமே தெய்வ வணக்கமாக மாறுகிறது. மாந்தருக்குத் தெய்வம் என்கிறோம். 'இதயத் தெய்வம்' என்கிறோம்.

வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் - என்கிறது திருக்குறள்.

இனி, பிள்ளைகள், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று தங்கள் பெற்றோரை வழிபடுவதற்கும், தொண்டர்கள் தங்கள் தலைவரை வழிபடுவதற்கும், பக்தர்கள் தங்கள் சமயக் கடவுளை வழிபடுவதற்கும் தங்கள் தங்கள் தாய்மொழி பயன்படக்கூடாது என்பது எப்படிச் சரியான கருத்தாகும்.

பண்டைத் தமிழகத்தில், இடைக்காலத்தில், இருவகையான வழிபாட்டு முறைகள் இருந்தன. ஒன்று ஆகம நெறி. இரண்டாவது நிகம நெறி. இவற்றுள் ஆகம நெறி என்னும், மலரும் நீரும் கொண்டு கடவுளை வணங்குவது தமிழர் நெறி. நிகம நெறி என்பது, தீ வளர்த்து வேள்வி செய்வது. அஃது எல்லாம்வல்ல இறைப் பேராற்றலை வணங்குவதாக எங்கும் எதிலும் குறிப்பில்லை. இயற்கை ஆற்றல்களாகிய நெருப்பு, காற்று, ஞாயிறு, கடல், இடி, மழை, நிலம், நீர் முதலியவற்றுக்குச் சினம் வந்து, மக்களை அழியாமல் காப்பாற்றும் பொருட்டு, ஆடு, மாடு, நெய், வெண்ணெய், கள் முதலியவற்றைத் தீயிலிட்டு வேள்வி செய்வது. இது தமிழர்களின் நெறியன்று.

பூசை என்னும் சொல்லே, பூவால் செய்யப்பெறும் வழிபாடு என்று பொருள் தரும் சொல்லாகும். இது தூய தமிழ்ச்சொல். பூஜை என்னும் சமசுக்கிருதச் சொல்லுக்கு, வணங்குதல் அல்லது வழிபடுதல் அல்லது வேண்டுதல், அஃதாவது தான் விரும்பியதைத் தரவேண்டும் என்று கேட்டல் என்றே பொருள். ஆனால், பூசை என்பதற்குப் பூவைக்கொண்டு வணங்குதல் அல்லது வழிபடுதல் என்பது மட்டுந்தான் பொருள்.

பூவைக்கொண்டுதான் தமிழர்கள் கடவுளை வணங்கினர் என்பதற்குப் பற்பல சான்றுகள் உண்டு,

பூவைக்கொண்டு வணங்குவதைப் 'பூவை நிலை' என்று தொல்காப்பியம் கூறுகிறது.

கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பழம் நூல்களில் பூவால் வழிபாடு செய்வது பூப்பலி என்றும், அகநானூறு, புறநானூறு போன்ற மிகப் பழைய நூல்களில் 'பூக்கோள் நிலை'* என்றும் கூறப்பெறும்.

'ஏடுடைய மலரால் முன்னை நாள் பணிந்தேத்த'

என்பார் திருஞான சம்பந்தர்.

'தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுதல்'

என்பார் திருநாவுக்கரசர்.

'தடங்கையால் மலர் தூய்த் தொழுவாரைத்
தன்னடிக்கே செல்லுமாறு வல்லான்'

என்பார் சுந்தரமூர்த்தி நாயனார்.

'நட்ட கல்லைத் தெய்வ மென்று
நாலு புட்பம் சாத்தியே'

என்பார் சித்தர்.

பூசை முறை தமிழர்களுக்கே உரியது. அவர்கள் யாருடைய இடை உதவியின்றியே, நேரடியாகவே தமிழ் மொழியால் வழிபட்டார்கள். 'அந்தப் பூசை முறை தமிழ்நாட்டில் தமிழர்களிடமிருந்து தான் இந்தியாவெங்கும் பரவியது' என்பார் 'தமிழின் கதை' என்னும் நூலில், அதன் ஆசிரியர் ச. கு. கணபதி (அய்யர்).

'தமிழரின் பழைய வழிபாட்டு நூல்களே வடமொழியில் பெயர்க்கப்பட்டு, இக்கால் வடமொழி ஆகம நூல்களாக வழக்கில் உள்ளன' என்பார், பரிதிமாற்கலைஞர் என்னும் வி. கோ. சூரியநாராயண (சாஸ்திரியார்), தம் 'தமிழ்மொழி வரலாறு' என்னும் நூலில்.

இனி, தமிழரின் பூசை முறை எந்த மொழியில் நடந்தது? நடந்திருக்க வேண்டும்? ஆம், அது தமிழிலேதான் நடந்தது.

'சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்தி' க் கடவுளை வணங்கியதாக, சுந்தரமூர்த்தி நாயனார் பற்றிக் கூறுகிறார், திருத்தொண்டர் புராணம் கூறவந்த சேக்கிழார் பெருமான்.

'மந்திரவெழுத் தைந்தும் (அஃதாவது ந-ம-சி-வ-ய என்னும்
வாயிடை மறவாது, எழுத்துகள்)
சிந்தை நின்வழி செலுத்தலின், அந்த
முத்தியும் இழந்திலம்'

என்று பட்டினத்தடிகள் தமிழ் மந்திரம் கூறி வழிபட்டதாகப் பாடுவார். ந-ம-சி-வ-ய என்னும் ஐந்தெழுத்துகளும் தமிழ் எழுத்துகள் அல்லவோ?

---

* அரசனிடம் வீரர்கள் வெற்றிப் பூவைப் பெற்றுக் கொள்வதும் பூக்கோள் நிலை என்று பொருள் பெறும்.

இன்னும் முருகன் சிவனுக்கு 'ஓம்' என்னும் மூலமந்திரத்தைச் சொன்ன பொழுது, தமிழ் மொழியிலேயே சொன்னான் என்பார் அருணகிரிநாதர்.

'கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழால் பகர்வோனே'-என்பது அவர் கூற்று

'ஓம்' என்னும் மூலமந்திரம் சொல்லும் தூய தமிழ்ச்சொல்லே அன்றோ? இம் மந்திரச் சொல்தான், 'ஆம்', 'ஆமென்' (அப்படியே ஆகுக என்பது பொருள்) என்று மேலை மொழிகளிலெல்லாம் வழங்குவதாக மொழி நூலார் கூறுவர்.

'இறைவனை ஏத்துகின்ற
விளையாண் மொழி இன் தமிழால்'

என்று கூறும், திருவிசைப்பா என்னும் நூல். இக்கூற்று, 'இறைவனை வணங்குவதற்கு-வழிபடுவதற்கு உரிய மொழி, இன்தமிழே என்று உறுதிப்படுத்துகிறது. இத திருவிசைப்பா என்னும் நூல் கி.பி. 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டளவில் தமிழில் எழுந்த வழிபாட்டு நூலாகும். இதனை இயற்றிய புலவர் பெருமக்கள் ஒன்பது பேர். அவர்கள்: சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்போராவர்.

இந் நூலின் தோற்றமே, தமிழில் வழிபாடு செய்யலாமா என்று இடைக்காலத்து எழுந்த ஐயுறவையும் அதை முறியடித்த மெய் வரலாற்றையும் நமக்கு உறுதிப்படுத்திக் காட்டும்.

மேலும், தமிழில் பூசைக்குரிய தூய தமிழ் மந்திரங்கள் அடங்கிய ஆகம நூல்கள் இருந்தன. ஆனால் அவை அழிக்கப்பட்டு விட்டன என்பதைத் திருத்தொண்டர் புராணத்துள் வரும் சேக்கிழார் உரையால் உணரலாம்.

'வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்' இதில் 'தமிழால் எழுதப்பெற்ற மறை நூல்' எழுது மறை எனப்பெற்றது. வேதங்கள் எழுதா மறை எனப்பெற்றதால் தமிழ் மந்திர ஆகமங்களை எழுது மறை என்றார்.

வேதாந்த தேசிகர் என்பார்,

'செய்யதமிழ் மாலைகளும் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே!

என்று, வடமொழி மந்திரங்களுள் விளங்காத தன்மைகள் தமிழ் ஆகம மந்திரங்களுள் தெளிவாக விளங்குகின்றன என்று கூறுகிறார்.

தாய் மொழியாகிய தமிழில் வழிபாடு வேண்டும் என்பதே அது நமக்கு விளங்கவேண்டும் என்பதற்குத்தானே!

தமிழ் மொழியில் கூறப்பெறும் சொற்களும், கருத்துகளும் இறைவன் செவியில் ஏறமாட்டா என்று அறியாமல் சிலர் கூறுவர்.

நக்கீரனார் பாடிய திருமுருகாற்றுப் படை என்னும் அழகிய நூலின் பாடல்கள் முழுவதையும், முருகன் தன பன்னிரண்டு செவி களையும் சாய்த்துக் கேட்டான் என்று கற்பனைப் பெருங்கடல் சிவப்பிரகாச அடிகள் கூறுகிறார். இது கற்பனையே ஆனாலும், தமிழ் மொழி, தமிழ்க் கடவுளாகிய இறைவனுக்கு ஏற்கும் என்று வலிவாகக் கூறியதன்றோ?

'புலவன் கூறுந்தமிழ் செவிதாழ்த்துக் கேளா
அந்நிலை மனக்களிப் புற்று
அறுமுகம் படைத்த கோன்' என்கிறார் அவர்.

மேலும், அவர் தமிழ்மொழியின் இனிமையைப் பாராட்டி, இவ்வுலகில் உள்ளவர் அனைவரும் கேட்ட மட்டிலும், இன்புறு கின்ற மொழியாகிய இனிய தமிழாயிற்றே. அதனை இறைவன் மட்டும் கேட்க மாட்டானோ? என்னும் பொருள்பட,

'இந்நில வரைப்பி லுள்ளோர்
யாவர்க்கும் கேள்வி இன்பம்
தன்னொடு பிறந்தஅந் தீந்தமிழ்'

என்று கூறுவதைக் கேளுங்கள்.

இப்படிக் கேட்பதற்கே இனிமையாகிய தமிழில் அப்பர், சுந் தரர், மாணிக்கவாசகர் பாடிய, வழிபாட்டுப் புகழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த இறைவன் மூடனாகிய தம் பாடல்களைக்கேட்டு மகிழ்வானோ என்று தாயுமானவர் பொருமுவதைப் பாருங்கள்!

'மொழிக்கு மொழி தித்திப்பாக
மூவர் சொலும் தமிழ்கேட்கும்
திருச் செவிக்கே, மூடனேன்
புலம்புவதும் முற்றுமோதான்'

என்பது அவரின் ஏக்கவுரை!

இப்பொழுது சொல்லுங்கள்!

இத்துணைப் பெருமையும், சீரும் சிறப்பும், தகுதியும், தெய் வத் தன்மையும் உடைய நம் தூய தமிழ்மொழி, வழிபடு மொழி - அஃதாவது வழிபாட்டுக்கு உரிய மொழி - வழிபடத் தகுந்த மொழி என்னும் தகுதிகளைப் படைத்த மொழிதானே!

எனவே, இனிமேலாகிலும் தமிழ்நாட்டில் உள்ள தமிழ்க் கோயில்களில் தமிழிலேயே வழிபாடுகள் தழைத்தோங்கட்டும்!

வாழ்க வழிபடு தமிழ் வளர்க தமிழ் வழிபாடு !!



1. நூல் : 'எரிமலைத் தாகம்' (புதுப் பாடல்கள்)
   ஆசிரியர் : 'சித்தார்த்தன்'.
   வெளியீடு : 'மூவேந்தர் அச்சகம்', சென்னை-14.
   விலை : 3 உருபா.

உணர்ச்சி, கற்பனை, மொழி, சொல்லமைப்பு, கருத்து, தொடர் அமைப்பு இவை எழுத்தாளரிடமிருந்து வெளிவரவேண்டியவை. இவை வெளிவரும் வடிவங்கள் இரண்டு. ஒன்று உரைநடை, இரண்டு பாடல் (கவிதை). உரைநடை பாடலாகாது; பாட்டு உரைநடைபோல் வெளியேறக்கூடாது. மேற்கண்ட உரைநடைத் தகுதிகளுடன் யாப்பு அமைப்பும் உடையதே பாடல் எனும் நிலையைப் பெறமுடியும்

தண்ணீர் வானிலிருந்து கொட்டும்போது, அது மழை என்னும் பெயரைப் பெறுகிறது. அதுவே, மலைமேலோ, குன்றின் மேலோ விழுந்து, அங்கிருந்து திரண்டு, தாழ்வான பகுதியில் கொட்டினால், அஃது அருவி. மழைநீர், ஆழமற்ற சிறிய பள்ளத்தில் தங்குமபோது, அது குட்டை. (நீரற்ற சிறிய பள்ளம் குட்டையாகாது. அது வெறும் பள்ளந்தான்.) அதேபோல், பலரும் குளிக்கப் பயன்படுத்தும் நீர் நிலை (அது செயற்கையானாலும், இயற்கையானாலும்) குளம். குடிக்கப் பயன்படுத்தும் நீர் நிலை ஊருணி. குளம ஊருணி ஆகாது; ஊருணி குளமாகாது.

இனி, நிலப் பகுதியில் வெட்டப்பட்டு நீர் பெற உதவுவது கிணறு; ஆற்றுப் படுகையில் ஆழமாகக் கிணறுபோல் தோண்டப்பெற்று நீர் பெறும் நிலை கூவல். ஆற்றில் நீரில்லாக் காலத்து அகலமாகவும், ஆழமாகவும் தோண்டுவது கேணி. சிறிதாகத் தோண்டி நீர் பெறுவது ஊற்று. நிலப் பகுதியிலோ, மலைப்பகுதியிலோ தானாகச் சுரந்துவரும் நீர் நிலை சுனை.

இனி, ஏர் உழவுக்காக - அஃதாவது பயிர் விளைவுகளுக்காகப் பயன்படுத்தும் நீர் நிலை ஏரி. சிறு அளவில் ஓடுகின்ற நீர் ஓடை. அதுவே ஓர் ஒழுங்காக வெட்டப்பெற்ற கால (நீண்டு செல்லும் பள்ளம் வழியாக (வாயாக) ஓடினால் அது கால்வாய். அதுவே, சிறியதாக இருந்தால் வாய்க்கால். இனி, மழை நீர் ஒரு

(தொடர்ச்சி 25 ஆம் பக்கம் பார்க்க)

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்*

[பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்]

சிங்கன் : இந்தக் கேள்வியைக் கேட்கத்தெரியாத தமிழர்கள் வடக்கே சென்று கை கட்டி நிற்பதால்.

வள்ளி : வடக்கே எதற்காகப் போகிறார்கள்? இங்குள்ள மக்கள் கூனா? குருடா? அல்லது கோழைகளா ?

சிங் : பதவி பெற்றுப் பிழைக்க, பணஞ்சேர்க்க, மேலும் கோழைகளாகி விட்டார்கள். அதனால் வடக்கே போகிறார்கள்.

வள் ; [கை நீட்டி) அத்தான், அதோ தெரிகிறதே தென்னந் தோப்பு, என்ன அழகாகக் காட்சி தருகிறது.

சிங் : ஆம் வள்ளி. அதுமட்டுமா அழகு தருகிறது ? அதன் அண்மையில் நிற்கும் அரச மரத்தின் குடம் குடமாகத் தொங்கும் கொம்புத் தேன் கூடுகளுந்தாம் அழகு தருகின்றன. வள்ளி பனைபடு பொருள்களைப் பக்குவமாய் உண்ணத் தெரியாமல், அதன் பாளையின் சொட்டும் கள்ளை இறக்கிக் காட்டு உன்மத்தையை ஊறப்போட்டு, நஞ்சை குடிக்க வைத்து விட்டார்கள் இங்கே, நல்லமைச்சர் 'கள்' என்று மேடையில் பேசும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் !

வள் : தாய்மேல் ஆணை, கள்ளுக்கடைகளைத் திறக்கமாட்டேன் என்று சொன்னவர்கள் தாமே இங்கு அமைச்சர்களாக இருக்கிறார்கள்.

சிங் : அப்போதே சொன்னேன் இல்லையா ! ஏன் என்று கேட்கத் தெரியாத மக்கள் இருப்பதால்தான். தீங்கு என்று எதைச் சொன்னார்களோ, அதையே செய்துகொண்டிருக்கிறார்கள்.

வள் : ஆம், அத்தான் நீங்கள் சொல்வதில் தப்பொன்றுமில்லை. உழைக்குந் தமிழர் உண்ண வழியில்லை. காலை முதல் மாலை வரை உழைத்தாலும், கால் வயிற்றுக் கஞ்சிற்கு வழியற்றுக் கண்ணீர் விட்டுக் கதறுகிறார்கள். கல்லூரியில் படித்தவரெல்லாரும் வேலையில்லாமல் வெளிநாடு போகிறார்கள்.

சிங் : போகாமல் என்ன செய்வார்கள். வேலை கேட்டாக் கையூட்டுக் கேட்கிறார்கள். நிலத்திற்கு விலை பேசுவது போல் வேலைக்கும் விலை வைத்திருக்கிறார்களே. தமிழன் தமிழனைச் சுரண்டுகிறான். தமிழையும் கெடுத்தான், தமிழ் இனத்தையும் கெடுத்தான்; தமிழ் நாட்டையும் குட்டிச்சுவ

ராக்கி விட்டனர். இங்கு ஆளும் அமைச்சர்களுக்குத் தமிழ் உணர்ச்சியும் இல்லை; விழிப்பு உணர்ச்சியும் கிடையாது.

வள் : பின் என்ன உணர்வுதான் இருக்கிறது ?

சிங் : தன் உணர்வைத் தவிர, வேறு ஒன்றுமேயில்லை ! கேள். தன் மனைவி, தன் பிள்ளை, தன் சாதி வாழ தப்புச் செய்தாவது பொருளைச் சேர்த்துப் பெட்டியில் பூட்டும் உணர்வு மிகுதியாக உண்டு. பொதுநலத்தைப் போக்கிவிட்டார்கள். பேசுவதெல்லாம் பொது நலம். நம்மை ஆளுபவர் இப்போது தந்நலத்தில் நாட்டங் கொண்டு வருகிறார்கள்.

வள் : அப்படியானால், தமிழர்வாழ என்ன அத்தான்செய்யலாம்?

சிங் : தமிழ் மொழியே தமிழர்களுக்கு ஒளி என்று நினைக்கச் செய்யவேண்டும். நம் தாய்மொழி, தமிழைத் தூய்மையாக்க வேண்டும். மொழி வழி ஒற்றுமைப்படுத்தி உணர்ச்சியூட்டி தன்மானம் உடையவனாக வாழ, தமிழன் வாழ வழி வகுத்துக் கொடுக்கவேண்டும்.

வள் : அப்படியானால், நாம் பேசும் தமிழ் தூய்மையானது இல்லையா ?

சிங் : இல்லை வள்ளி, நாம் ஐந்து சொற்கள் பேசினால், அதில் நான்கு சொற்கள் சமற்கிருதம், ஏறத்தாழ இருபத்து நான்கு மொழிச் சொற்கள் தமிழில் கலந்துள்ளன.

வள் : அடேயப்பா ! இருபத்து நான்கு மொழிச் சொற்களா ? தமிழில் கலந்துள்ளன; ஆமாம், அத்தான் எப்படி அந்த அயற் சொற்கள் தமிழில் புகுந்தன?

சிங் : தமிழன் எப்போதும் தன்மானம் அற்றவனாகவே வாழ்கிறான். பிறனைப் பார்த்ததும், அவனைப் பெரியவனாக எண்ணி, அவன் பேசுவது போலப் பேசுவதும், அவனைப் போல நடப்பதுமே பெருமைக்குரியது என எண்ணிப் பின் பற்றுகிறான். எனவேதான், பிறமொழியைத் தமிழில் கலந்து பேசி வருகிறான். எழுதியும் வருகிறான். தன் பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பதுங்கூட, பிறமொழிப் பெயர்களே ! கேள்! முருகன் என்ற தூய தமிழ் சொல்லை மறந்துவிட்டு, சுப்ரமணியன் என்று அழைக்கிறான். மகிழ்நன் என்ற பெயரை விட்டுவிட்டு, சந்தோசம் எனக் கூப்பிடுகிறான். அறவோன் என்ற தூய தமிழ் பெயரிருக்க தர்மன் என்ற வடமொழிச் சொல்லை ஏற்றுக்கொண்டான். தமிழை மறந்துவிட்டான்.

வள் : அத்தான்.

சிங் : என்ன ?

வள் : அஃதாவது பல மொழிகள் பேசும் மக்கள் வாழும் இந்த நாட்டில், அவ் வயல் மொழி கலக்கத்தானே செய்யும்;

மேலும், பல மொழிச்சொற்கள் கலப்பால் மொழி வளர்ச்சியடைகிறது எனச் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன்' நானும் அது நல்லதே யென எண்ணுகிறேன்.

சிங் : வள்ளி, தூய்மையான பால் ஒரு குவளையில் இருக்கிறது என வைத்துக்கொள். அதில் நீரைக் கலக்கலாமே!

வள் : அப்படிக் கலந்தாலும் அத்தான், பாலின் அளவு கூடுதல் ஆகும்; அது நல்லதுதானே!

சிங் : எண்ணிப் பார்க்காமல் பேசாதே! பாலின் அளவு கூடும்; ஆனல், அப் பாலின் சாரம் போய்விடும் இல்லையா? அதை உண்டால் சாரம் கெட்டுப்போகும்.

வள் : ஆமாம்; அதனால்தான், பிறமொழிச் சொற்கள் கலக்கலாகாதெனக் கூறுகிறீர்களோ?

சிங் : ஆம். வள்ளி நன்றாகக்கேள்; அவனவன் மொழியில்தான் சிந்திக்கமுடியும். இன்னும் கேள். தமிழன் வாழ்வு எப்படியெல்லாம் சீரழிகிறது என்று விளக்கிக் கூறுகிறேன். தமிழினம் சாதி, சமய வேறுபாட்டால் வேற்றுமை உணர்வால் பிரிந்து வாழ்கிறது. போதாக்குறைக்கு இப்போது அரசியல் கட்சிகள் தமிழர்களைப் பிரிந்து வாழத் தூண்டி விடுகின்றன. அனைவரும் நாம் தமிழர் என்ற எண்ணத்தை மறந்து' வேற்றுமை உணர்வாலேயே வாழ்கிறோம். அதனால் நமக்குள்ளேயே சண்டைகள்;

வள் : அதற்கு என்ன செய்யலாம்?

சிங் : தமிழர்களை இனி மொழியாலேயே ஒற்றுமையாக வாழ வைக்க இயலும்; வேறு வழியே கிடையாது;

வள் : ஏன் அத்தான் முடியாது? சாதி - சமயங்கள் தாமே தமிழர்களைப் பிரிக்கிறது. அவற்றை ஒழித்துவிட்டால் ஒற்றுமை வளரும் இல்லையா?

சிங் : இவ்விரண்டும் ஒழியாது! ஏன் தெரியுமா? சாதி, சமயங்களை ஒழிக்காமல், அவற்றின் அடிப்படையில் தங்களுடைய சாதிச் சமயத்தினர், உயரப் போராடுகிறார்கள். இந் நாட்டின் அத்தனைச் சாதிகளின் பெயராலும் கழகங்கள் உண்டு. இன்னும் கேள். அரசு அவற்றைத் தடை செய்யாது, மாறாக அவற்றை வளர்த்து அவற்றின் துணையால் ஆட்சியை நடத்துகிறது; சாதிக்கு ஓர் அமைச்சர் என்றபடி, சாதியினைப் பங்கு போட்டுக் கொள்கிறது. அரசியல் கட்சிகளும் சாதியின் அடிப்படையிலேயே வளர்கின்றன. தேர்தல் காலத்தில் எச் சாதியினர் எங்கு கூடுதலோ அச் சாதியினரே அங்கு வேட்பாளர். அவர் பேசுவதோ நம் சாதி உயர ஓர் அமைச்சர் பதவியைப் பெற, உங்கள் சாதிக்காரனுன எனக்கு உங்கள் ஒப்போலைகளை அளியுங்கள்' என்பதே!

வள்ளி இப்போது சொல், ஒழியுமா சாதி? சமயமும் இம் முறையிலேயே காக்கப்படுகிறது.

வள் : ஒழியாது அத்தான், ஒருபோதும் ஒழியாது. அப்படியானால், நீங்களா அத்தான் இதை ஒழிக்கப் போகிறீர்கள்?

சிங் : நான் மட்டும் எப்படிச் செய்ய இயலும்? தமிழை வளர்ப்பேன், சாதியை ஒழிப்பேன் எனப்பேசி, ஆட்சியில் அமர எண்ணுகிற தலைவர்கள் ஒன்று சேர்ந்து செய்தால்தான் முடியும்.

வள் : அவர்கள் மக்களுடைய ஒப்போலைகளைப் பெற, தமிழ்-தமிழ் என்றும், நாம் தமிழர்-தமிழர் என்றும் பேசிவிட்டுப் பதவியில் அமர்ந்தபின், தாம் சொன்னதை மறந்து, பதவி மயக்கத்தில் கிடக்கிறார்களே! வேறு ஒன்றும் வேண்டாம் அத்தான். கல்லூரிகளிலே தமிழில்தான் கற்பிக்கவேண்டும்; அதைக்கூட சட்டமாக்க முடியவில்லையே.

சிங் : அ'தெப்படி உனக்குத் தெரியும்?

கண்ணையன் : (மறைவிலிருந்து பார்க்கிறான்:)

வள் : அண்டை வீட்டில், பெண் ஒருத்திகல்லூரியில் படிக்கிறாள். அவள் ஆங்கிலத்திலேயே நெட்டுருப் போடுகிறாள்; நான் கேட்டேன்; இப் பாடங்களை ஏன் உள்ளத்தில் இருத்தப் படிக்கிறாய் என்று! அதற்கு விடையாக, பாடங்கள் யாவும் ஆங்கிலத்தில் இருப்பதால், பொருள் விளங்கிப் படிக்க இயலாது. ஆகவே, தேர்விற்கு மட்டுமே படிப்பு. எனவே, உள்ளிருத்திப் படிக்கிறேன் என்றாள். நான், ஏன் தமிழில் சொல்லித் தரமாட்டாங்களோ என வினவினேன். அதற்கு விடையாக அவள் சொன்னாள் அத்தான்; 'அரசு அதற்கு இசையவில்லை' என்று. மேலும் அவள் சொன்னாள், தமிழில் படித்தவர்களுக்கு வேலை கிடைக்காதாம்!

சிங் : கேட்டாயா? மக்களை ஏமாற்ற தமிழ் மொழிப்பற்றுளராகக் காட்டிக்கொண்டு, பதவி கிடைத்ததும் அப்படித்தான் செய்வார்கள்; பதவிக்குத் தமிழ் படிப்பதற்கு ஆங்கிலம். தமிழில் படித்தவர்களுக்கே அரசு வேலை என்றால் என்ன?

வள் : அத்தான், நேரம் மிகுதியாகிவிட்டது; தாத்தாதேடுவார்; நான் வீட்டிற்குப் போகிறேன்.

சிங் : சரி போய் வா, நாளை மீண்டும் சந்திப்போம்.

வள் : (அவன் கையைப் பிடித்து முத்தமிட்டுப் பிரிகிறாள்) அத்தான் வருகிறேன். (போய் விடுகிறாள்)

கண்ணை : (மறைவிலிருந்து பார்த்துவிட்டு மறைந்து ஓடுகிறான்)

—(தொடரும்)

இருபதினாயிரம் ஆண்டுகள் பழைமை உடையது தமிழரின் இசை அறிவு!

எனது வேண்டுகோள்!

நான் சில வேண்டுகோள்களையும் பண் ஆராய்ச்சிக் குழுவினர் முன் வைக்க விரும்புகிறேன்.

தேவாரப் பாடல்களின் காணப்பெறும் பண்கள் 24 ஆகும். அவற்றுள் காணப்படாத சாளரப்பாணி என்னும் பண், திருவிசைப் பாத் திருப்பதிகங்களில் உள்ளது. ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்விபப் பிரபந்தத்தில், தேவாரத்தில் காணப்படாத சில பண் களும் உள்ளன. அவை முதிர்ந்த குறிஞ்சி, வியந்தம், பாலையாழ், செருந்தி, நாட்டம், நைவளம், அந்தாளி, தோடி, கவ்வானம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம் ஆகியவையாகும். பிங்கலந்தையும் பஞ்ச மரபும் 103 பணகளின் பெயர்களைக் குறிப் பிடுகின்றன. ஆனால், தமிழிசைக் கழகத்தின் பண்ணாராய்ச்சியில் இதுவரை 23 தேவாரப் பண்களே அறியப்பட்டுள்ளன என்று கருதுகிறேன். எனவே, இந்தப் பண் ஆராய்ச்சிப் பணியில் 103 பண்களின் பண்டை வடிவத்தைக் காண முயல வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

பல்சுவைப் பாடல்களான அக்கைச்சி, அச்சோ, அப்பூட்சி, அம்மானை, ஆற்றுவரி உத்தியார், ஊசல், எம்பாவை, கப்பற் பாட்டு, கழல் கந்துக வரி, காக்கை, கானம், காவல் வரி, கிளிப் பாட்டு, குணலை, குதம்பை, குயில் குரவை, குறத்தி கூடல், கொச்சகச் சார்த்து, கோத்தும்பி, கோழிப்பாட்டு, சங்கு, சாயல் வரி, சார்த்து வரி, சாழல், செம்போத்து, தச்சராண்டு, தோணோக் கம், நிலை வரி நையாண்டி, பகவதி, படைப்பு வரி பந்து, பல் லாண்டு, பல்லி, பள்ளியெழுச்சி, பாம்பாட்டி, பிடாரன், பொற் சுண்ணம், மயங்கு சினை, முகச்சார்த்து முகமில்வரி, முகவரி, முரிச்சார்த்து, வள்ளைப்பாட்டு, சித்தர் பாடல்களில் வழங்கும் பலவகை இசைப் பாட்டுகள், நொண்டிச் சிந்து, சிந்து கும்மி, கோலாட்டம், பலவகையான கண்ணிகள், ஆனந்த களிப்பு, கீர்த்தனங்கள் முதலியன பலவும் இசைப் பாடல்கள் இவையாவும் அந்தந்த இசைக்குத் தகுந்தவாறு பண் இசைக்கப்படுகின்றன என்று டாக்டர் உ. வே. சாமிநாதர் கூறுகிறார். ஆகையால் அந்த இசைப் பாடல்களில் அமைந்துள்ள பண்களையெல்லாம் ஆராய்ந்து முடிவு காணவேண்டும்.

தமிழகத்தில் நாட்டுப்புறப் பாடல்களையும் விரிவாக ஆராய்ந்து அவற்றின் பண்ணமைதிகளையும் கண்டு அவற்றை நிலையாகத் தொகுக்க வேண்டும்.

'இராகம்' - என்பதும் தமிழ்ச் சொல்லே என்று கருதப்படு கிறது. பழந்தமிழ்ப் பண்களில் சிலவற்றின் பெயர்களிலேயே

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

ஒன்றிய நாடுகள் அவை
(UNITED NATIONS ORGANIZATION)

இ. கிளை அலுவலகங்கள்:

நியூயார்க் நகரத்தில் உள்ள தலைமை அலுவலகத்தில்தாம் எல்லா ஒ நா. அமைப்புகளும் அமைந்துள்ளன என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. அதன் தலைமைச் செயலகமே நியூயார்க்கில் உள்ளது.

செனிவாவில் அனைத்து நாட்டுக் கழக மாளிகையில் ஐரோப்பியப் பகுதியும்,

வியன்னாவில் அனைத்து நாட்டு வட்ட நடுவமும், பொருளியல் அமைப்புகள ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்காவிலும் உள்ளன. ஒ. நா. செய்தி நடுவங்கள் உலகின் பல தலைநகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

12. பிற சிறப்புக் குறிப்புகள்:

அ. பாலத்தீன விடுதலைக் குழுவிற்கு இசைவும் ஆதரவும்: 1981 இல் பாதுகாப்புக் குழுவில் நடுக்கிழக்கு நாடுகளின் நிலைமையின் பல்வேறு செய்திகள் குறித்து விரிவான தருக்கம் நடைபெற்றது. பாலத்தீன விடுதலை நிறுவனம் உட்பட, தொடர்பான எல்லாத் தரப்புகளும் பங்கெடுத்துக் கொள்ளும் நிலையில் ஒரு நயமான விரிவான தீர்வு காணமுடியும் என்பதை இந்தத் தருக்கம் காட்டிற்று. நடுக் கிழக்கு நிலைமை குறித்துத் தருக்கம் நடைபெற்று வந்தபோது, மேலைய நாடுகளின் கடுமையான எதிர்ப்பு இருந்தபோதிலும், தனது கூட்டங்களுக்கு பகர்வாளரை (பிரதிநிதியை) அனுப்பும்படி, சோவியத்து ஒன்றியத்தின் தீவிர ஆதரவோடு பாதுகாப்புக் குழு பாலத்தீன விடுதலை நிறுவனத்துக்கு (P.L.O) அழைப்பு விடுத்தது. பாதுகாப்புக் குழுவின் கூட்ட நடவடிக்கைகளில் பாலத்தீன விடுதலை இயக்கம் பங்குகொண்டது அந்த நிறுவனத்தின் அனைத்துலகச் சாய்காலை உயர்த்திற்று.

அரபு மக்கள் தம் உரிமைகளுக்காக நடத்திவரும் போராட்டத்தைப் பாலத்தீன மக்களின் நயமான கோட்பாட்டை-1982

(முன் பக்கத் தொடர்ச்சி)

இராகம் என்றுள்ளது. 'அராகம்' என்ற தமிழ்ச் சொல்லே இந்த 'இராகம்' எனக் கருதுகிறேன். வெறும் இராகத்தை மட்டும் குறிப்பதற்கு அச் சொல்லையும் தாளத்தோடு கூடிய இசையைக் குறிப்பிடுவதற்குப் 'பண்' என்ற சொல்லையும் பழந் தமிழர்கள் கையாண்டிருக்கலாம் என்று கருத இடமுள்ளது. ஆகையால் இதுகுறித்தும் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தில் முடிவு காணலாம் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன். —அடிப்படை 'தினமணி' 23-12-85

பிப்ரவரியில் நடைபெற்ற அரபு நாடுகளின் அரசு மற்றும் அரசியல் கொள்கைகளை, ஒ. நா. அவை உறுதியாக ஆதரிக்கிறது.

ஆ. நாடுகளின் தன்னுரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவு:

ஒ. நா. அவை அமைப்புறுதியில் இடம் பெற்றுள்ள ஒரு முகாமையான பகுதி, குடியேற்ற நாடுகளின் வல்லாளுமையை அவற்றின் எல்லா வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் ஒழித்துக் கட்டுவதாகும்.

அதற்கு ஒ.நா. அவையின் அமைப்புறுதியின்படி, தன்னுரிமை உறுதியமைப்புக்கு, மக்களுக்குள்ள உரிமைக் கொள்கையாலும், 1960 திசம்பர் 14-இல் ஏற்கப்பட்ட குடியேற்ற நாடுகளுக்கும் மக்களுக்கும் விடுதலை உரிமை வழங்குவது தொடர்பான கொள்கை அறிவிக்கையாலுமே அது வழிகாட்டப்பெறுகிறது.

இந்தக் கொள்கை அறிவிக்கை (பிரகடனம்), மக்களின் விடுதலைப்போராட்டம் எல்லாக் குடியேற்ற வல்லாட்சிகளும் சடசடவென சரிந்து வீழ்வதற்கு வகை செய்தது. ஏறத்தாழ 100 சிறிய நாடுகள் விடுதலை பெறும் வளர்ச்சிப் பாதையில் இன்று நடைபோடுகின்றன. இவை தொடர்பான சிக்கல்கள் அண்மை ஆண்டுகளில் ஒ. நா. பாதுகாப்புக் குழுவின் நடவடிக்கைகளில் முகாமை இடத்தைப் பெற்று வந்துள்ளன.

இ. நமீபியா விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவுத் தீர்மானம்

ஒ.நா. அவையை எதிர்நோக்கும் முகாமையான குடியேற்ற ஆட்சி ஒழிப்புப் பணிகளில் ஒன்று, நமீபியாவை விரைவாக விடுதலை செய்யும் சிக்கலாகும். நமீபியா தென்னாப்பிரிக்காவால் சட்டப்புறம்பாகக் கையகப்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள ஒரு நிலப்பகுதி என்று, பாதுகாப்புக் குழு, பொது அவை, மற்றும் நமீபியாவுக்கென அமைக்கப்பெற்ற ஒ.நா. அவையின் துணைக்குழு இருபத்துநான்கு நாடுகளின் சிறப்புக்குழு போன்ற பிற ஒ. நா. அமைப்புகள் ஆகியவற்றின் தீர்மானங்கள் ஐயத்துக்கிடமற்ற முறையில் திட்டவட்டமாக அறிவித்தன. நமீபியாவில் தென்னாப்பிரிக்க அதிகாரிகளும் துருப்புகளும் இருந்து வருவது அனைத்துலகச் சட்ட நெறிமுறைகளுக்கும், ஒ.நா அமைப்புறுதிக்கும் முரணானதாகும். தென்னாப்பிரிக்கா நமீபியாவைத் தொடர்ந்து தனது ஆளுமையில் வைத்திருப்பது அதன் மக்களுக்கு எதிரான ஒரு வல்லகப்படுத்தச் (ஆக்கிரமிப்புச்) செயலாகும்; உலக இணைவமைதிக்கும் (சமாதானத்திற்கும்) அச்சுறுத்தலாகும்.

நமீபியாவிலிருந்து தென்னாப்பிரிக்கா கட்டுப்பாடின்றி வெளியேற வேண்டும் என்று பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் ஒ.நா. பொதுக்குழு கோரியது. எனினும் பிரிட்டோரியா ஆட்சி அவ்வாறு செய்ய மறுத்துவிட்டது; இதன் மூலம் ஒ.நா. அவைக்கு ஒரு வெல்விளியை (சவாலை) விடுத்தது.

1976-ஆம் ஆண்டிலும் 1979-ஆம் ஆண்டிலும் பாதுகாப்புக் குழுவில் 385, 435-ஆம் எண்களுள்ள தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டபோதிலும் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

ஈ. ஒ.நா. அவை தன் படைத்துறையைப் பயன்படுத்துதல் :

ஒ.நா. அவை தேவையான நிலைகளில் படை வலிவைப் பயன் படுத்தவேண்டிய காலங்களில் அதன் பொறுப்பு மிகப் பெரியது. இதுபற்றி ஒ.நா. அவையின் அமைப்புறுதி கண்டிப்பான வரையறையைச் செய்துள்ளது.

ஒ.நா. அமைப்புறுதியின்படி, அனைத்துநாட்டு இணை அமைதியையும், பாதுகாப்பையும் பராமரிப்பதற்கோ, நிலைநாட்டுவதற்கோ நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள அதிகாரம் படைத்த ஒரே அமைப்பு பாதுகாப்புக் குழுவே ஆகும். ஒ.நா. படைகளின் உருவாக்கம், அவற்றின் பணிகள், இயைபு, எண்ணிக்கை, போர்த்திற நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல், தலைமையின் கட்டமைப்பு, அவை செயல்படும் நிலப்பகுதியில் தங்கியிருக்கும் காலம், அவற்றுக்காகும் செலவு முதலியவை தொடர்பான எல்லாச் சிக்கல்களிலும் முடிவெடுக்கும் அதிகாரம் அதற்கு உண்டு. ஒ.நா. அமைப்புறுதியின்படி, இந்தச் சிக்கல்களைக் கையாளப் பொதுக்குழு உட்பட வேறு எந்த அமைப்புக்கும் உரிமை இல்லை. இது தொடர்பாகப் பாதுகாப்புக்குழு மேற்கொள்ளும் முடிவுகளை நிறைவேற்ற தலைமைச் செயலாளர் இந்த நிறுவனத்தின் தலைமை மேலாளர் என்ற முறையில் தம் அதிகாரம் முழுமையும் பயன்படுத்தி உதவ வேண்டும்.

உ. ஒ. நா. அவையின் இப்பொழுதைய நிலை :

உலகின் உயர்ந்த நோக்கங்களுக்காகவும், விளைவுகளுக்காகவும், இணைவமைதிக்காகவும், ஒன்றிய நாடுகள் அவை தோற்றுவிக்கப்பெற்றிருந்தாலும், அதில் உறுப்பாண்மை எய்தும் சில வல்லரசுகளின் போக்கால், அதன் ஆற்றல் படிப்படியாகக் குறைந்து வருகிறதோ என்ற ஐயம், உலக நாடுகள் சிலவற்றிடம் தோன்றி வருகிறது.

ஒ.நா. அவையின் விழுமிய குறிக்கோள்களை நடைமுறைப் படுத்துவதற்கு இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியது இன்றியமையாதது. ஒ.நா. அமைப்புறுதி வகுத்துத்தந்த பாதையிலிருந்து மாந்தக்குலம் விலகிச் செல்லக்கூடாது. ஒ.நா. நிறுவனத்தின் ஈடுபாட்டையும் திறனையும் உயர்த்துவதற்கு அது பாடுபட வேண்டும். மோதல் நிலைமைகளும், முரண்பாடுகளும் நிறைந்த இன்றைய உலகில் ஒ.நா. அவையின் தேவையான ஈடுபாட்டையும் திறனையும் உயர்த்துவதுபற்றி நினைத்துப் பார்ப்பது இயலுவதா என்று சில சமயங்களில கேட்கப்பட்டாலும், இந்த அணு ஊழியில் இணைவமைதி வாழ்வுக்கும், ஒத்துழைப்புக்கும், வேறு அறிவடிப் படையிலான மாற்று இல்லாத நிலையில், இது முடியாததன்று, தேவையும்கூட என்பதை உலக மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்,

[16 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரண்டு வெள்ளமாகித் தன்னுடைய போக்கில் ஒரு வழியை (ஆற்றை) ஏற்படுத்திக் கொண்டு ஓடினால், அஃது ஆறு. பல ஆறுகள் ஓடிக் கலக்குமிடம் கடல்.

இவ்வாறு ஒவ்வொரு நிலைக்கும் தனித்தனிப் பெயர்களைக் காரண முறையிலோ, இடுகுறியாகவோ இட்டு அழைப்பது, நம்முடைய அறிவு விளக்கத்துக்குத் தானே யொழிய, அறிவைக் கட்டுப் படுத்துவதற்கோ, உரிமையை மழுக்குவதற்கோ அல்ல.

'எல்லா நீர் ஒழுக்குகளையும், நிலைகளையும, தேக்கங்களையும் நான் மழை யென்றோ, ஆறு என்றோ தான் அழைப்பேன்; அருவி என்றோ, குட்டை, குளம், கிணறு, ஊருணி, ஏரி, கடல் என்றோ அழைக்க மாட்டேன்' என்று ஒருவர் கூறினால், அஃது அவர் அறிவைக் காட்டாது; அறியாமையைத் தான் காட்டும். அஃது அறிவுரிமையும் ஆகாது; அறியாமைத் தாழ்ச்சியே ஆகும்.

இதுபோன்றதே, இக்கால் 'புதுக்கவிதை' என்னும் பெயரால் 'புதுப்பாடல்' எழுதி வருபவர் கோட்பாடும். பாடல் அல்லாத ஓர் அமைப்பை எத்தனை முறை கூறினாலும், அது பாடலாகி விடாது. 'புதுப்பாடல்' என்று சொல்வதால் அது பாடலாகி விடுமா? புதிது புதிதாக எழுதும் எல்லாம் பாடலின் புதிய வெளியீடும் புதுப்பாடல்தான்! பழைய பாடல் ஆகுமா? ஆனால், 'புதிய' என்னும் சொல்லைச் சேர்ப்பதாலேயே யாப்பமைப்பு இல்லாதனவெல்லாம் பாடல்கள் ஆகிவிடா. ஏதோ ஆசைக்காக எழுதி, நாமே சொல்லிக்கொண்டு நிறைவுபெற்றுக் கொள்ளலாம். அவற்றை அறிஞர்களும் ஒப்பமாட்டார்கள்; காலமும் நிலை நிறுத்தாது.

யாப்பமைப்பை யெல்லாம் சிதைத்து, மொழியொழுங்கை யெல்லாம் தவிர்த்து, ஒரு புதுமை செய்கின்றோம் என்னும் வெறியில், இக்கால் 'புதுக்கவிதை'ப் போராட்டக்காரர்கள் தங்கள்மேல் தாங்களே சேற்றை வாரிப் பூசிக் கொள்கிறார்கள். இந்த அறியாமை எந்த நிலையில் இவர்களைக் கொண்டுபோய்ச் சேர்க்குமோ, தெரியாது. அவ்வகையில் வந்த நூல்களில் ஒன்றுதான் 'எரிமலைத் தாகம்' என்னும் இப் பாடல் நூல்.

உணர்வைப் பொறுத்த அளவில், கற்பனையைப் பொறுத்த அளவில் இந் நூலில் உள்ள கருத்துகள் பாராட்டக்கூடியனவே! ஆனால், இவற்றைப் புதிய பாடல்கள் என்று இந் நூலாசிரியரும், அவரைச் சேர்ந்தவர்களும் கூறி, இவர்களை தங்கள் முதுகுகளில் தாங்களே தட்டிக்கொள்ள வேண்டியதுதான்!

இந் நூலுள் வரும் தவறான சொல்லாட்சிகள், பல்லாக்கு, தழும்பு போன்றன. பல்லக்கு, துளும்பு என்பனவே சரி.

இலக்கணப் பிழைகள் :

கட்டவித்து துள்ளிவரும்-கட்டவிழ்த்துத் துள்ளிவரும்.

கண்ணதாசன்தான்-கண்ணதாசன்தாம் சொன்னவர்.
ஆவேசங்கங்கள்தான்-ஆவேசங்கள்தாம்.
கவிதையல்ல-கவிதையன்று.
நோக்கமல்ல-நோக்கமன்று.
வாதமல்ல-வாதமன்று.
தாளமும் சந்தமும் தேவைதான்-தாளமும் சந்தமும் [தேவைதாம்.
காற்றல்ல-காற்றன்று:
பாட்டல்ல-பாட்டன்று.
நனிச்சிறந்த-நனி சிறந்த.
மூளைப்பரன்-மூளைப்பரண்.
ஒரு அல்லி-ஓர் அல்லி.

—இவைபோலும், மொழிப் பிழைகள் பக்கத்திற்கு ஐந்தாறும், ஏழெட்டுமாக நூல்கள் நெடுகவும் மலிந்திருப்பது, கண்களை மட்டு மன்று, மனத்தையும் உறுத்துகின்றன.

ஒற்றுப் பிழைகளை எண்ணவே முடியவில்லை.

பாட்டுக்கு யாப்பிலக்கணந்தான் தேவையில்லை என்று இவர் கள் சொல்லுகிறார்கள். மொழியிலக்கணம் கூட வேண்டியதில்லை என்றால் எப்படி ?

'அடிக்கின்ற புழுதிக் காற்றில் பறக்கத் துடிக்கிறது எனது பாறுங்கல் ஆசைகள்!' என்று நூல் தொடங்குகிறது. 'பறக்கத் துடிக்கின்றன என் அல்லது என்னுடைய பாறுங்கல் ஆசைகள்' என்றெழுதினால் என்ன உணர்வு கெட்டுவிடும் ? பிழையாக எழு தினால்தான் 'புதுக்கவிதை' ஆகும் என்றால், ஆசை மட்டும் 'கல்' அன்று. அறிவும் 'கல்'தான் என்றே பொருளாகி விடும்.

'என் உலகத்தில் புதுக்கவிதையே, நீதான் 'ராஜ கவிதை' என் கிறார் ஆசிரியர். அவரவர் குழந்தை அவரவர்க்கு 'ராஜா' தான் என்பதைப் போன்றது, இது. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான். ஆனால், உண்மையிலேயே பொன் குஞ்சு என்று ஒன்று இருந்தால், அதை என்ன சொல்வது? எண்ணிப் பார்க்க வேண்டும்.

2. நூல் : 'பேசத்தெரிந்த ஊமைகள்' (புதுப் பாடல்கள்)
ஆசிரியர் : அசோகஜெயன்.
வெளியீடு : இளம் எழுத்தாளர் அச்சகம், அருள் அச்சகக் கட்டடம், கன்னியாகுமரி-629165.
விலை : 5 உருபா.

மேலே கூறப்பெற்ற கருத்துகள் இந்த நூலுக்கும் முன்னுரை யாகப் பொருந்தக் கூடியவை. இந்த நூலிலும் அத்தவகையான

பிழைகள் ஏராளம். இன்னொன்று, புதுப்பாடல்கள் என்ருலே நல்ல தூய தமிழை, அவற்றில் பார்க்க இயலாது என்பதற்கு இந்த நூலும் ஒரு சான்ருக அமைந்திருக்கிறது. வேஷம், ஆக்ரோஷம், இதயம், சங்கீதம், இராகம், வசந்தம், தூபம், சம்பவம், நிஜம், விஞ்ஞானம், விந்தை. சாதாரணம், விஷயம், சஞ்சலம், வார்த்தை, சமுதாயம், நியாயம், மௌனம், அலங்காரம், நீதி, அந்தரம், சிங்காரம், வாலிபம், சோகம், சுபிட்சம், புருஷர், விரக்தி, தர்மம், செபம், நவீனம், யாசித்தல், விவரம் முதலிய நூற்றுக்கணக்கான வடமொழிச் சொற்களும், பேஞ, பெட்ரோல், சோசலிசம், பிளாட்பாரம், அப்ரண்டிஸ் கோர்ஸ், போனஸ், கியூ முதலிய ஆங்கிலச்சொற்களும் அள்ளித் தெளிக்கப் பட்டிருக்கின்றன நூலில்.

ஊர்உலகத்தின் சீரழிவுகளையெல்லாம் எடுத்துக் கூறத்தெரிந்த 'புதுப்பா' எழுதுபவர்களுக்குத் தமிழ்மொழியின் சீரழிவுகளை உணர்ந்து கொள்ளாமல் போனது ஏன் ?

மொழிச் சீர்குலைவுபற்றி இவர்கள் கவலைப்படவில்லையானுல், குமுகாயக் சீர்குலைவில் மட்டுமே இவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்.

குமுகாயம் - மக்களமைப்பு-என்பது எல்லாக் கூறுகளையுமே உள்ளடக்கியதுதானே !

இந்த நூலிலும் கற்பனைக் கருத்துகளும், உணர்வுகளும் கொட்டிக் கிடக்கின்றன. அவை பாராட்டப் படவேண்டியவை; பாராட்டுகிருேம். மொழி சிதைக்கப்படும் பொழுது, அதையும் கண்டிக்கிருேம்.

3. நூல் : அறிமுகம் (ஆராய்ச்சிக் கட்டுரைகள்)
ஆசிரியர் : பாவலர். வேலூர் ம. நாராயணன், க மு.
வெளியீடு : நிறைவாணன் பதிப்பகம், 57, சர்க்கார் மண்டி வீதி, வேலூர்-4. (வ.ஆ.மா.வ.)
விலை : உருபா. 9.

நூலாசிரியரின் பதின்மூன்று கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். 1. நூல் மாண்பு. 2. வள்ளுவரும், வாடிக்கையாளர் பணியும். 3. சொற்கள் சொல்லும் கதைகள். 4. பாவாணர் ஓர் உவமைப் பனிமலை. 5. கலுழ்ந்தன கண்கள். 6. வைக்கம் வீரர் கண்ட வள்ளுவர். 7. சோவியத் புதினங்களில் புதுக் கவிதைக் கூறுகள். 8. ஊர்க்கதை பேசுவோம் வாரீர். 9. அதிரடிக்கு எதிரடி. 10. இராவண காவியம் ஓர் இனவுணர்வுப் பெட்டகம். 11. தமிழில் வழங்கும் ஆங்கில மரபுத் தொடர்கள். 12. அறிவியல் துறவி-குருநானக். 13. கனித் தமிழ்ச் சித்தர்-குணங்குடி

தமிழ் மகனே, எழுவதென்றாள் ?

— பாவலர், இளஞ்சித்திரன்

உனக்கே உன்னைத் தெரியவில்லை !
உயர்வுகள் பெருமை புரியவில்லை !
இனப்பே ருணர்வை இழந்தவனாய்
ஏதிலி யாய்நீ உழன்றவனாய்
மனக்கோ ளாறில் இருக்கின்றாய் !
மற்றவர் சிரிக்க நடக்கின்றாய் !
சினக்கோ ளரியாய்த் தமிழ்மகனே,
சீறி எழுவ தென்றாளோ ? 1.

வரலாற் றறிவே உனக்கில்லை ;
வாழ்ந்தவுன் பழமைக் கெதிரினனாய்க்
கரவார் பார்ப்புக் கடியவனாய்க்
கருத்தில் மூடக் களஞ்சியமாய்
மரமாய் அன்றே கிடக்கின்றாய் !
மண்புழுப் போல நெளிகின்றாய் !
உரமாய்ப் புலியாய்த் தமிழ்மகனே,
உயிர்த்திங் கெழுவ தென்றாளே ? 2.

வடவார் இந்தி கிளர்ந்ததுவாய்
மண்ணினில் உன்னைச் சாய்ப்பதற்குத்
தடம்பார்த் தொவ்வோர் அடியடியாய்ச்
சமயம் பார்த்தே வைத்தபடி

[முன் பக்கத் தொடர்ச்சி]

மஸ்தான் ஆகிய தலைப்புகளில் சில பல அரிய கருத்துகளைக் கொண்ட கட்டுரைகள் ஆய்வு நோக்குடன் எழுதப்பெற்றுள்ளன.

நூல்கள் நூலகங்கள் இவற்றின் தேவைகளை வலியுறுத்துகின்றது முதற் கட்டுரை. சில திருக்குறள்களை வைப்பக வாடிக்கையாளர்களுடன் தொடர்பு படுத்துகிறது இரண்டாவது கட்டுரை. அரவணைத்தல், கதர், இஞ்சி மூரபா, மூட்டைப்பூச்சி, சீமை, மிளகாய் முதலிய 24 சொற்களுக்கு அடிப்படைப் பொருள் விளக்கங்களை, மூன்றும் கட்டுரை கூறுகிறது, சில முகாமையான ஊர்ப் பெயர்களுக்கு விளக்கம் தருகிறது. 'ஊர்க்கதை பேசுவோம் வாரீர்' என்னும் கட்டுரை. மொத்தத்தில் கட்டுரைகள் படிக்கச் சுவை தருகின்றன. நூலாசிரியரின் தமிழ்ப்பற்றும் ஈடுபாடும் பாராட்டத் தக்கன.

0

இடம்பார்த் துள்வந் தமர்ந்துவரும்;
எதுவும் அறியா திருக்கின்றாய்!
அடலே றனைய தமிழ்மகனே,
ஆர்த்தே எழுவ தென்றாளோ? 3.

குலமா யிரமாம் சாதிகளின்
கொடிபிடித் தூரில் கத்துகிறாய்!
மலமாம் அதைச்செஞ் சந்தனமாய்
மார்பினில் பூசித் தருக்குகிறாய்!
உலகோர் இடையில் நாடிலனும்
ஒடுங்கி விழுந்தாய்! அதைஎண்ணாய்!
உலவாக் களிறே, தமிழ்மகனே,
உணர்ந்தே எழுவ தென்றாளோ? 4.

குந்திட உனக்கே நிழலில்லை;
கொப்பினில் தாவுங் குரங்கா,நீ?
சொந்தமண் இருந்தும் அயலவர்போல்
சோற்றுக் கிங்கே அலைகின்றாய்!
சிந்தையில் மானம், இழிவில்லை!
சீ!சீ! எனுமா றிருக்கின்றாய்!
பொந்துவாழ் புலியே, தமிழ்மகனே,
புகழ்பட எழுவ தென்றாளோ? 5.

பொருத்தமொன் றில்லா வழக்கங்கள்,
பொய்மத மூடப் பழக்கங்கள்
பெருத்தவ னாகப் போய்விட்டாய்!
பெட்டைத் தனங்கள் குடியிருக்கும்
வருத்தமொன் றில்லா ஆண்மகனே,
வையம் இகழ்வ தறிவாயா?
திருத்தமு டன்நீ தமிழ்மகனே,
சிறுத்தையே எழுவ தென்றாளோ? 6.

தமிழை மறந்தாய்! அடடாவோ!
தளைப்பட் டுள்ளாய் பிறன்கையில்
உமிழத் தகுமா றுண்டுடுப்பாய்!
உறங்கிக் கிடப்பாய் பொழுதெல்லாம்!
அமிழப் படுமா றினமிருக்கும்
அவல நிலையைப் பாராயோ?
திமிர்ந்த காளைத் தமிழ்மகனே,
தேர்ந்தே எழுவ தென்றாளோ? 7.

எதிர்ப்பாற்றலைத் தகர்க்கும் நோய்!

(எய்ட்சு) மற்றுமொரு திடுக்கிடும் செய்தி!

(சென்ற இதழில் வெளிவந்த இந் நோய்பற்றிய கட்டுரையில் கூறப்பெற்ற செய்திகளின் மேல் விளக்கமாகும் இக்கட்டுரை.)

ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும் போதும், அந்த ஆண்டின் ஒப்பற்றதொரு தனி நபரை 'இவ் வாண்டின் பெருமகர்' (மேன் ஆஃப் தி இயர்) என்ற மேலைய தாளிகைகள் அழைப்பதுண்டு. மேற்கு செர்மனி தாளிகைகள், இந்த ஆண்டு 'இவ்வாண்டின் சொல்' என்று 'எயிட்சு' (Aides) நோயைத் தேர்ந்தெடுத்துள்ளன.

'ஏ. ஐ. டி. எசு' என்ற 'எயிட்சி'ன் பொருள், நோய் எதிர்ப் பாற்றலைத் தகர்க்கும் ஒருவகை நச்சு நுண்ணியிரி (வைரசு) என்பதே. அந்த நச்சு நுண்ணுயிரி ஒரு நோயூக்கியாகச் செயல் படுகிறது. அது நேரடியாக நோயாளியைக் கொல்வதில்லை; ஆனால், தாக்கப்பட்டவரது நோய், எதிர்ப்புத் திறன் அனைத்தையும் அஃது அழித்து, அவருக்கு எந்த நோய் ஏற்படினும், அதனின்றும் விடுதலை பெறமுடியாதவாறு, அவரைக் கொன்று விடுகிறது. எந்த நோய் ஏற்படினும், அதற்கு எதிரான மருந்துகள் அவரது உடலில் எந்த விளைவையும் ஏற்படுத்துவதில்லை.

இந்த நோய் எப்படி முதன் முதலில் தோன்றிற்று என்பது குறித்துப் பற்பல கதைகள் உலவி வருகின்றன; அவை அனைத்துமே; உண்மையை மறைப்பதற்காகத் தானோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆலி வால்விண்மீன் தோன்றியதைக் கூட இவர் அந்த நோய்க்குக் காரணம் காட்டுகின்றனர். முதன் முதலில், அந்தநோய் பரவலாக ஓரினப்புணர்ச்சியின் ஈடுபாடு கொண்டவர்களையும், வெறிப் பொருள் பயன்படுத்துவோரையும் பீடித்ததால், அவர்களிடமிருந்தே நோய் தோன்றியிருக்கலாம் என்று கருதப்பட்டது. வாத்சாயனரின் 'காம சூத்திர' காலத்தில் இருந்தே ஓரினப் புணர்ச்சி இருந்துதான் வந்துள்ளது. அப்படியானால், அந்த நோய் ஏன் தலைதூக்குவதற்கு, 1978 ஆம் ஆண்டினை, அதுவும் அமெரிக்காவைத் தேர்ந்தெடுத்தது? ஒருவேளை நோய் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுவதற்குப் புணர்ச்சி காரணமாக இருக்கக்கூடும். அதேபோல, போதைப் பொருள் ஊசி போட்டுக் கொள்பவர்கள், அவர்களுக்குள் பொதுவானதோர் ஊசியைப் பயன்படுத்துவதனாலும், அவர்கள் நோயைப் பரப்புபவர்கள் ஆகின்றனர்.

இந் நோய் அமெரிக்காவில் தான் முதன் முதல் தலைதூக்கிற்று என்பதை மறைப்பதற்காக, அஃது ஆப்பிரிக்கக் கண்டத்தில் தோன்றிற்று என்றும், சில மேலைய அறிவியலாளர் கூறி வருகின்றனர். அது குறித்து ஆப்பிரிக்க அறிவியல் அறிஞர்கள் கடுஞ்சினம் அடைந்துள்ளனர். ஏனெனில், இதுகாறும் அதை

மெய்ப்பிப்பதற்கான எந்த ஒரு சான்றையும் யாரும் அறிவித்ததில்லை. கென்யா மருத்துவக் கழக இதழிகையான 'மெடிக்சு' ஆப்பிரிக்காவில் நோய் தோன்றியதாகக் கூறப்படுவதை வன்மையாகக் கண்டித்துள்ளது. காறுவைச் சேர்ந்த 'கானியன் டைம்சு' என்ற தாளிகை 'நிறவெறி பிடித்த வெள்ளையர்கள், கறுப்பர்களைத் தூற்றச் செய்வதற்காகக் கிளப்பிய புரளியே அது' என்று எழுதியுள்ளது.

நடைமுறையில், 1978 இல், அமெரிக்கச் சாய்காலின் கீழ் உள்ள 'எய்டி' தீவிலிருந்து நியூயார்க்கில் குடியேறியவர்களிடம் முதன் முதல் அந்நோய் கண்டுபிடிக்கப்பட்டது.

மீண்டும், அது 1980 இல் நியூயார்க் நகரைத் தாக்கிற்று, இம்முறை அது எய்டியிலிருந்து குடியேறியவர்களுடன், அமெரிக்கர்களையும் பிடித்தது. ஓரினப் புணர்ச்சியாளர்களும், வெறி மருந்து ஏற்றிக் கொள்வோரும் நோயை விரைவாகப் பரப்ப உதவினர். 1983 பிப்ரவரியில், அமெரிக்காவின் 33 மாநிலங்களைச் சேர்ந்த கணிசமான பகுதியினர் நோயினால் பிடிக்கப்பட்டனர். 1985 அக்டோபர் மாதச் செய்தியின்படி, 13;611 அமெரிக்க நோயாளிகள், மருத்துவமனைகளில் உள்ளனர். உண்மையில் நோய் கொண்டவர்கள் இன்னும் அதிகமாகவே இருப்பர். பலரும் குமுகாயத் தூற்றுதலுக்கு அஞ்சி, நோயைக் கமுக்கமாக வைத்திருக்க எண்ணுபவர்கள்.

இந்த நேரத்தில், இந்த நோய்க்கான காரணம்பற்றி இலண்டனின் மிடில்சக்சு மருத்துவமனையைச் சேர்ந்த, ஓய்வு பெற்ற பாலியல் அறிஞரான பண்டுவர் 'கான் சீலி' என்பவர், ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். அவரது கருத்தின்படி, பொதுவாக ஆடுகளைத் தாக்கும் 'விசுனு' என்னும் நச்சு நுண்ணுயிரியுடன் கூடுதலாக ஒரு மரபு அணுவைச் செயற்கைமுறையில் சேர்த்து, ஆய்வுக் கூடத்தில் 'எய்ட்க' நச்சு நுண்ணுயிரி (வைரசு) உருவாக்கப்பட்டிருக்கக் கூடும்.

மரபியல் பொறியியல் துறையில், தான் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து அமெரிக்கா பெருமையடித்துக் கொண்டிருந்ததும், சி: ஐ. ஏ. உளவுத் துறையின் கீழ் இயங்கிவரும், ஃபோர்ட் டெட்ரிக்கிலுள்ள வேதியல் ஆய்வுக்கூடம், மருமமாக இயங்கி வருவதும் அனைவரும் அறிந்தவையே.

மேலும், உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையை அழித்து விடும் உயிரியல் கருவியை உருவாக்க அமெரிக்கப் பாதுகாப்புத்துறை எண்ணி வந்ததாக இலண்டனிலிருந்து வெளியாகும் 'கார்டியன்' இதழ் நடத்திய உசாவல் ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. 'எய்ட்க' நச்சுயிரியின் வேலையும் அதுவேதான்.

வரலாற்றைச் சற்றுப் பின்நோக்கிப் பார்ப்போம். 1960 ஆம் ஆண்டில், காங்கோ தலைவராக பாட்ரிசு லுமும்பாவைக் கொல்வதற்கென, சி. ஐ. ஏ. உளவுத்துறை வேதியல் ஆய்வுத் துறையைச் சேர்ந்த 'சோ பிரேனவ்' என்னும் புனை பெயருடன் ஓர் ஆள்

லியோபால்ட்விலியில் வந்திறங்கினர். அவர் தம் பெட்டியில் மிகக் கேடு தரும் கொடிய நுண்ணுயிரிகளைக் கொண்ட ஒரு குப்பியையும் கொண்டு வந்திருந்தார். அந்த நுண்ணுயிரிகள் எப்படியேனும் லுமும்பாவின் உதட்டை அடைந்தால் போதும். உணவின் மூலமோ, பற்பசையின் மூலமோ அதை லுமும்பாவின் உடலில் செலுத்த முயற்சி மேற்கொள்ளப் பட்டது. அஃது ஒரு மாந்தனை நெஞ்சாணுக்கி, ஏதோ ஒரு நோயினால் அவன் பீடிக்கப்பட்டு இறந்ததாகப் பிறர் கருதும்படி வேலை செய்யக்கூடியது.

லுமும்பாவுக்கிருந்த காவலர்களைத் தாண்டி, அவரை அப்போது கொலை செய்வதில் 'சோ பிரெளன்' வெற்றி பெற முடியவில்லை என்பதும், ஆனால் அதே லுமும்பா பின்னர் கொடுமையாகக் கொல்லப்பட்டார் என்பதும் நாமறிந்தனவே.

சில ஆண்டுகளுக்கு முன்னர், 'செயின்ட் லூயி சர்ச்' என்ற அமெரிக்க குமுக மத நிறுவனம், பென்டகனின் இல கமுக்கமான பதிவேடுகளை வெளியிட்டது. உடனே அமெரிக்காவிலேயே பெரும் கூக்குரல் எழுந்தது நினைவிருக்கலாம். அந்தப் பதிவேடுகளின்படி, 50 ஆம். 60 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் நியூயார்க், பிலடெல்பியா, வின்னிபெக் நகரங்களிலும், கனடாவிலும், பென்டகன்னும், சி. ஐ. ஏ.-வும் சில புதிய நச்சுயிரிகளை மக்களிடையே பரப்பி ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

அந்த ஆய்வுகளினால் தீவிரமாகத் தாக்குண்ட 6 பேர், 1980 ஆம் ஆண்டில், அமெரிக்க அரசின் மீது வழக்குத்தொடுத்த போதுதான், சி ஐ ஏ-வின் அந்தக் குற்றங்களை வெளியுலகம் தெரிந்துகொண்டது.

ஃபோர்ட் டெட்ரிக்கிலுள்ள மருத்துவ ஆய்வுக் கூடத்தைச் சேர்ந்த படைத்துறை அறிவியலறிஞர்கள் நோய்த்தடுப்பு ஆற்றல் துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டதாகவும், அவற்றின் அடிப்படையில் மாந்த உடலின் இயற்கையான நோய்த் தடுப்பு அரண்களைத் தகர்க்கும் வழிகள் குறித்து ஆய்வு செய்து வந்ததாகவும், 'படைத்துறை ஆய்வு வளர்ச்சியும், வாய்ப்புகளும்' என்னும் அமெரிக்க இதழ் ஒன்று எழுதியிருந்தது.

ஆகவே செயற்கையாக, மரபியல், பொறியியல் முறையில், ஒரு நச்சு நுண்ணுயிரியைக் கண்டுபிடித்து, அது மாந்தர்களிடமே ஆய்வு செய்யப் பட்டிருக்கக் கூடும். ஒருவேளை, அந்த ஆய்வுகள் எய்டி தீவில் நடத்தப் பட்டிருக்கலாம்.

நடைபெற்ற உண்மை விளத்தங்கள் இவை. இவற்றிலிருந்து முடிவுகளை நீங்களே உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

வருங்காலத்தில் 'எயிட்சு' நோயினால் தாக்கப்பட்டவர்கள் யாரேனும், பென்டகனுக்கும், சி-ஐ-ஏ-க்கும் எதிராக வழக்குத் தொடுத்தால்தான் முழு உண்மையும் உலகம் தெரிந்துகொள்ள வாய்ப்பு உண்டு.

'வினை விதைத்தவன் - வினை அறுப்பான்' என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால், இன்றோ வினை விதைக்காதவர்களும்கூட அதனை அறுவடை செய்ய வேண்டியுள்ளது.

—ஏ. எசு. மூர்த்தி.

50 சிவக் குருமார்களைக் கொண்டு, வடமொழியில் மந்திரம் ஓதச் செய்து, வாழ்த்துப் பெற்றுக்கொண்டார்.” அவர் மட்டும் வடமொழியில் ஓதி நீண்ட வாணுளுடன் வாழ்வது; நாம் மட்டும் ‘போற்றி-போற்றி’ என்று தமிழில் சொல்லிப் பொக்கென உயிரை விடுவதா ? என்று எங்களிடம் கேட்டார். அவருடைய கேள்வியின் பிற்பகுதி என்னவோ வெகுளி (பேதை)த்தனமாகத் தோன்றினும், இந்த வினவின் முற்பகுதி எமக்கு அதிர்ச்சியைத் தந்தது. அடிகளார் வடமொழியில்தான் வாழ்த்தப் பெற்றாரா ? அடிகளார் இப்படிச் செய்திருப்பாரா ? “தென்மொழி” இதனைத் தெளிவுபடுத்துமா ? அன்பன், - சீனி. செங்தேவன், அனுப்பபட்டி.

0 : 1152 : பாவலரேறு பெருஞ்சித்திரனார்க்கு, வணக்கம். 10-2-86 திங்களன்று தங்களின் தொலைக்காட்சி நிகழ்ச்சி கண்டேன். தங்கள் கருத்துகள் செறிவார்ந்தனவெனினும், தனித்தமிழ் காப்பாளராகிய தாங்கள்தாம் உரையாற்றுகிறீர்களா என்னும் ஐயம் பலர்க்கும் எழுந்தது. ஏனெனில், தனித் தமிழுக்கென்றே அல்லும்-பகலும் அயராது உழைக்கும் தாங்கள், சப்பான் என்று பலுக்குவீர்கள் என எதிர்பார்த்தோம். மாருக, ஐப்பான் என்றீர்கள். நயன் அல்லது நாயம் என்று கூறுவீர்கள் என நம்பினேம்; நியாயம் என்றீர்கள். தமிழில் சாத்திரி எனப் பலுக்கற்பாலதான சொல்லை வடவர் போன்று சாஸ்திரி என்றீர்கள். பூவை நிலை என்பதைத் தவருகப் புரிந்துகொண்டு, பூவிட்டு வழிபடுவது என்று கதைத்தீர்கள். இவற்றையெல்லாம் தவிர்த்திருக்கலாகாதா? இனியேனும், தனித்தமிழ் நோக்கில் சிறிதும் தளராதிருக்க வேண்டுகிறேன். தனித தமிழன்பன், —குறிஞ்சி-வளவன், சென்னை-40.

(ஆசிரியர் குறிப்பு : தொலைக் காட்சி உரை கேட்பவர்களுக்கு சப்பான் என்பது தெளிவாக விளங்கவேண்டும் என்பதற்காகவே ஆங்கிலப் பலுக்கலை அவ்வாறே கூறவேண்டியதாயிற்று. மேலும், நாம் வட எழுத்துகளாகக் கருதிக் கொண்டிருக்கும் ஜ, ஷ, ஸ, ஷ, க்ஷ ஆகியன பிராக்ருத எழுத்துகளே. பிராகிருதம் வட திராவிட மொழியே! தமிழர்களுடையதே! வடக்கே சென்ற தமிழர்கள், தாங்கள் வழங்கிய தமிழை இடம், காலம், பருவம் இவற்றிற்கேற்ப திரித்து வழங்கிய திசை மொழியே பிராகிருதம். அங்குள்ள நிலைகளையொட்டி ஒலியழுத்தத்திற்கேற்ப உருவாக்கிக்கொண்ட எழுத்துகளே அவை. இவை சமசுக்கிருத ஆக்கத்திற்கு தேவைப்பட்டதால், அதிலும் இவை கையாளப் பெற்றன. இனி, இக் காலநிலைகளுக்கேற்ப இவற்றையும் இன்றியமையாமை கருதி, பிறமொழிப் பெயர்களைக் குறிக்கின்ற இடத்தில், பலுக்கல் ஒலி கெடாமைப் பொருட்டுப் பயன்படுத்துவதில் தவறில்லை என்னும் கொள்கையை நாம் அறிவியல் வளர்ச்சி கருதி ஒப்புக்கொள்வதே நல்லது. உ.த.மு.க நெறிமுறையிலும் இக் கோட்பாடு வலியுறுத்தப் பெறுகிறது. இல்லெனில் சில குறிப்புப் பெயர்ச் சொற்களை நாம் வேறு வேருகப் பலுக்கவேண்டியிருக்கும். இதுபற்றி எல்லாம் தென்மொழியில் விரிவான ஒரு கட்டுரை வரும்.

இனி, நியாயம் என்று நான் சொல்லவில்லை. ஞாயம் என்றே சொன்னேன். அது, பழக்கப்பட்ட பிறர் செவிகளுக்கு ‘நியாயம்’ என்று கேட்டிருக்கிறது. நயன் - நயம் - நாயம் - ஞாயம் என்பனவே படிப்படி வளர்ச்சி நிலைச்சொற்கள். இவை அனைத்தும் தமிழே! நாயம் என்னும் சொல்

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

லையே வடமொழியாளர் நியாயம் என்று திரித்துக்கொண்டனர். ஞாயம்-ஞாயிறு என்பன தூய தமிழ் வடிவங்களே!

இனி, தொல்காட்சி உரையில், மயக்கம் இல்லாமைக்காகவும், அவர் 'பார்ப்பனர் என்பதைத் தெளிவாக உணர்த்தவுமே 'சூரியநாராயண சாஸ்திரி' என்று அழுத்தமாகக் குறிப்பிடவேண்டி வந்தது என்க.

அடுத்து, 'பூவை நிலை'—என்பது, அரசனால் மற்றவர்களுக்குப் பூக்கொடுக்கப் பெறுவதைச் சுட்டினாலும், பூவின் பயன்படுத்தத்தைச் சுட்டுவதற்காக அங்குக் குறிக்கப்பெற்றது. இவ்விதழில் வந்துள்ள அக்கட்டுரையில் விளக்கம் காண்க)

0 : 1153 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அய்யா, அவர்களுக்கு வணக்கம்! நடுவணரசு சுட்டிய குற்றச்சாட்டு, உண்மையான தமிழுணர்வு உள்ளவர்களை மட்டுப்படுத்தும் நோக்கத்துடன் அமைந்துள்ளது. தமிழ், தமிழன், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் மாந்தர்களின் உணர்வுகளுக்கு உரமேற்றிடும் வகையில் தங்களின் எழுத்தும், பேச்சும் அமைந்திருப்பதைச் சுட்டி, நடவடிக்கை எடுப்போம், என்று நடுவணரசு உரைப்பது, அவர்கள் தமிழ் நாட்டில் ஏதோவொரு புரட்சியை எதிர்பார்க்கிறார்கள் என்றே தோன்றுகிறது. அதற்கான எதிரடியாகத் "தென்மொழி" சுவடி: 22, ஓலை: 4-இல் அட்டைப் பக்கப் "பா" அமைந்துள்ளது. அய்யா! தங்களின் மொழி, இன நாட்டுக்குழைக்கும் பொதுநலத் தொண்டர்களுக்கான கட்டுரை, கருத்துகளைக் கடைப்பிடிக்க வேண்டிய கடமையைக் காட்டும் காலக் கண்ணாடியாக உள்ளதை உணர முடிகின்றது. பொதுநலத்தின் மேன்மையில், மென்மையை எதிர்பார்க்க முடியாது, இருப்பினும், அதன் வழிமுறை நாட்டின் உயர்வுக்குதவும் என்பதை வலியுறுத்தியுள்ளீர்கள்.

முற்போக்குச் சிந்தனை எந்தப் பொதுவுடைமையாளர்களுக்கும் இன்றுள்ள காலத்தில் தெளிவை உண்டாக்கும் மக்களின் மனப்போராட்டங்களின் உள்ளீடுகளை வெளிப்படுத்துவதாக இல்லை. அவர்களின் உணர்ச்சியின் வெளிப்பாடுகள் தாய்மொழி வழி வருவதாக இல்லை. முற்போக்கு இலக்கியத்தின் தற்கால ஆழத்தை அளந்த ஆசிரியர் குழு நல்ல தெளிவை ஏற்படுத்தியுள்ளார்.

— பாவலர். இராவணதாசன், சென்னை-23.

0 : 1154 : "தமிழ்நிலம்" இதழ் எண்: 67-இல் இப்பொழுதுள்ள குமுகாயச் சீர்கேடுகளை வெளிப்படையாக, ஒலிவு மறைவு இல்லாது பகர்ந்து மகிழ்வு தருகிறது. அனைத்துப் போராட்டத் தொழிலாளருக்கும் நன்று கூறிப் பகன்ற அறிக்கை சிறப்பாக இருந்தது. நாட்டின் நலன் கருதாமல் நயன்மையாக அரசு நடத்தும் கேடர்களை உணரச் செய்யும் வகையில் கூறியது சிறப்பாக இருந்தது! ஆம்! அறிவையும், உண்மையையும் கேட்கவும், மதிக்கவும் திறன் இல்லாதவரின் ஆளுகைக்கு என் சொல்வது? மக்கள் உணரவில்லையே! பொய்மைதானே ஆளுகிறது!

"வாய்மையே வெல்லும்"

அன்பன், —பாவலர். தாழை ந. இளவழகன், மணவை.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)